.870

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு 0-2

இ... நிலையம்
V 8. N 7. 14. 2. 1935

SL
m211, N28 KN
N35.8.7.
199205

.870

KALANILAYAM தனிப்பிரதி விலை அணு 0-2-6.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

கலாநிலயம் :—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol. 8] 1935 ஃபிப்ரவரி மீ 14 உ [No. 7

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 97
2. கம்பராமாயணம் (கார்காலப் படலம்)
T. N. சேஷாசலம் B.A., B.L. 99
3. ஒத்தெல்லோ (அங்கம் 1. களம் 3.)
Shakespeare's—"Othello" 102
4. வில்லிபாரதம்—(துரியோதனன்)
K. T. விஜயராகவாச்சாரியார் B.A. 103
5. சூரியன் - (உருவம்)
E. T. இராஜேஸ்வரி அம்மாள் M.A., L.T. 105
6. நம்மாழ்வார் வைபவம் (7-ம் பத்து, 3-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.,B.L. 107
7. சூளாமணி (இரதநூபுரச் சருக்கம்)
வித்துவான்
T. P. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை M.A.,B.L. 109
8. பாரதியார் வேதாந்தப் பாடல்
R. நரஸிம்மன் B. A. (Honrs) 110
9. வர்த்தமானம் 112

## கலாநிலயம்

### கடவுட் சித்தம் 4.

கடவுளின் காரியங்கள் நம்முடைய காரியங்களின் அளவையாய்க் கருதப்படாமை வேண்டப்படுவதன் காரணங்கள் இதுகாறும் விளக்கப்பட்டன. இந்த மயக்கந் தெளிந்து, பொருள்களின் தத்துவமும், அப்பொருள்களால் ஆகிய உலகில் நாம் வாழ்கின்ற இவ்வாழ்க்கையின் மெய்ம்மையும், நம்முடைய ஐம்பொறிகளுக்கும் அவைகளின் காரியங்களைச் சோதிக்கின்ற அறிவிற்கும் மேலாய நிலைமையை உடையனவாம் என்னுஞ் சிந்தனை சிறக்கும்போதுதான் பயனுடைய நெறியைப் பின்பற்றினவர்களாவோம்.

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு

என்று, இந்த நன்னிலையையே உட்கொண்டு திருவள்ளுவர் சாற்றினர். பொருளல்லவற்றைப் பொருளாக் கொள்ளுதல் மருள். கானல்நீரைப் பின்பற்றுவானொருவன் இம்மருட்கை யுடையவன். இது பொறியின் பிழையன்று; இல்லாத வொருபொருள் இருப்பதுபோல் தோன்றியவொரு வஞ்சனையாம். தோன்றுகின்ற தோற்றத்தை நம்முள்ளத்தோடு தொடர்புபடுத்திவிடுவதுடன் பொறிகளின்வேலை முடிந்துவிடுகின்றது. இந்த வொரு தொடர்புமாத்திரம் போதுமென்று விவகரிப்பவன் மருட்கையில் உழல்பவனேயன்றி வாழ்கின்றவனல்லன். மற்று, தொடர்புபட்ட இத்தோற்றத்தோ டமையாமல், அத்தோற்றத்திற்கு ஆதாரமாகிய பொருளின் உண்மைத் தன்மையைக் கண்டுகொள்ள முயல்வது அறிவு. அவ்வறிவுடைமையால் எப்பொருளெத்தன்மைத்தாயினும் அப்பொருளின் மெய்ப்பொருள் காணலாம். தற்காலம் நடைபெறுகின்ற பூதசாத்திர ஆராய்ச்சிகள் அனைத்தும் பொருளின் உண்மையைக்காண முயல்கின்றன. இம்முயற்சியின் முடிவாய் எய்துவது ஐம்பொறிகளின் உணர்வு. தோன்றுகின்ற தோற்றத்தோடு நம்மைத் தொடர்புபடுத்துவது மாத்திரமே தொழிலாக இருந்த பொறிகள், அறிவினது உதவியால், அத்தோற்றத்தைமாத்திரமன்றி, தோற்றப் பொருளின் உண்மையையும் உணர்த்துவதால், இதனை ஐயுணர்வு என்னலாம். எனினும், பொறிகளின் தொழிலைப் பொறிகளின் உணர்வாக மாற்றிக்கொண்ட வளவிற்றானே யாதும் நாம்சாதித்துவிட்டவர்களாகமாட்டோம். இவ்வறிவிற்கும் மேலாய ஒரு அறிவு இருக்கின்றது. இதனைத் தெளிந்து கொள்ளாமல் உழல்கின்றது இவ்வுலகம். ஆதலால் அன்றோ,

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு

என்று பெருந்தகைத் திருவள்ளுவநாயனார் இரங்குகின்றார். ஐயுணர்விற்கு மேலாயதொன்று வேண்டும்; அதுதான் மெய்யுணர்வு; தத்துவ ஞானம் என்னச் சிறப்பித்துக் கூறப்படுவது மிதுவே. மெய்ப்பொருள் வேறு, பொருளின் மெய்ம்மை வேறு. பொருளல்லாதனவற்றைப் பொருளென்னக்கொள்ளல், மடமை; பொருளாயவற்றின் உண்மைத் தன்மையைக் கண்டு கொள்ளல், அறிவு. அதனிற்கும் அப்பால், அப்பொ

ருளின் மெய்ம்மையைத் தெளிந்துகொள்ளல் மெய்யுணர்வாம். உண்மைக்கும் மெய்ம்மைக்கும் இடையில் ஒரு வேற்றுமை யுண்டென்பது இக் கலாநிலய வாசகர்களுக்குப் புதியதோர் செய்தியாய்த் தோன்றாது. "உண்மையில் உழல்வார் திறம்" என்ற தலைப்புடைய கட்டுரைகளை இச்சமயம் கருத்துட் கொள்ளல் நலம். (4-வது வால்யூம், இதழ்கள், 13, 14, 15, 16, 17.). ஒரு விடயம் தோன்றுமாறு இருத்தல்தானதன் உண்மை; அது இருக்கவேண்டிய நிலை அதன் மெய்ம்மை. மனிதர் காமக்குரோதாதிகளிலகப்பட்டு உழல்கின்றாரென்பது உண்மை; மற்று, இம்மனிதரே பிரம்மம் என்பது மெய்ம்மை. மெய்ம்மையை நோக்குங்கால் உண்மையனைத்தும் பொய்போலும்மே.

ஆயுட்காலத்தை அவலமாக்காமல் நாம் வாழுவல்லவர்கள் ஆவதற்கு, அம்மெய்ம்மையின் தன்மையை ஆராய்ந்து அறிந்துகொள்ளவேண்டும். திருவள்ளுவர் தம் காலத்திற்குச் சிறிதுமுன்னர்க் கிரீஸ்தேயத்தில் வாழ்ந்த வித்தகர் ப்ளேடோ (Plato) என்பவர் உண்மைக்கு மப்பாலாகிய இம்மெய்ம்மையைப் பாவனை என்று அழைத்தார். உண்மையை உணர்த்தவல்லது ஐயுணர்வின் திறம்; அவ்வுண்மைக்கும் அப்பாலான பாவனையை உணர்த்துவது மெய்யுணர்வின் திறமாம். ப்ளேடோவின் தத்துவமுறைப்படி, இப்பாவனையின் தன்மையைச் சிறிது தெரிந்துகொள்ளல் நலம்.

புலன்களால் தெரிந்துகொள்ளக் கூடியவைகளுக்கும் மேலானவோர் அறிவு மனிதனுக்கு உளதெனப் ப்ளேடோ ஒப்புக்கொண்டார். விடயங்களைப் பற்றி நாம்கொள்கின்ற கருத்துக்களின் மூலமாகவேதான் இவ்வறிவை எய்துதல் இயலும் என்பதும் அவரது கொள்கை. எனினும், புலன்களுக்கு எட்டக்கூடிய பொருள்களெல்லாம், ஒருநிலைநிற்றலின்றிஎக்காலமுமிடைவிடாமல் மாறிக்கொண்டே இருக்கின்ற இயல்பினவாதலின், அவைகளின் உண்மைத் தன்மையோ இன்னதுதானென்று உறுதியாக உரைப்பதென்பது ஒருவகையிலும் இயலாதென்னவுங் கருதினார். நிலைமையாலும்நிகழ்ச்சியாலும் இவ்வண்ணம் இந்நிகிலப் பொருள்கள் அனைத்தும், ஓர் இமையளவிற்குள் எத்தனையோவகை மாறிவிடுகின்றனவெனின், மனிதன் பொருள்களை அவை 'உள்ளவாறு' எங்ஙனம் தன் புலன்களால் அறிந்துகொள்ள இயலுமென்று இவர் கொள்கின்ற ஐயம் சால நுட்பம் வாய்ந்தது. 'மாறியவாறே' இருக்கும் நிகிலப் பொருள்களுக்கு 'உள்ளவாறு' என்று உரைப்பதற்குரியதன்மை அமைவதோ இயலாது என்பது வெளிப்படையே. ஒரு பொருளினிடத்தில் சென்ற நம் புலனானது, அப்பொருளைப் பற்றியகருத்தை நம்மிடங் கொணர்ந்து சேர்ப்பதன் முன் அப்பொருள் மாறிவிடுகின்றதால், பிறகு இக் கருத்திற்கு உரிய பொருளே இல்லையே. அந்தக் கருத்திற்கு உரியதாயிருந்த பொருள் மடிந்துவிட்டதென்னலாம். ஆதலின், ஒருபொழுது கொண்ட எக்கருத்தையும் மீண்டும் அப்பொருளின்பால்செலுத்த நாம் வல்லவர்கள் அல்லோம். ஏனெனில், முன்நம்மிடங் கண்ட அப்பொருளிதற்குள் மாறி வேறானவொரு பொருளாகவேயிருக்கின்றது. நிகிலப்பொருள்களின் நிலையாமை இவ்வகைத்தேயாமென்று, ப்ளேட்டோ பிறப்பதற்கு ஐம்பது வருடங்களுக்குமுன் இறந்த, ஹீராக்ளிடஸ் (Heraclitus) என்னும் கிரேக்க வித்தகர் வாதித்தார். அவ்வாதத்தை ப்ளேடோவும் ஏற்றுக்கொண்டனர். இந்தக்கொள்கை இந்திய தத்துவ முறையிலும் புதியதன்று. "ஹரதி நிமிஷேத் காலஸ் ஸர்வம்" (காலமானது நிமிஷந்தோறும் எல்லாவற்றையுங் கொல்கின்றது) என்று சங்கரர் இயம்பியது இக்கருத்தினின்றும் அதிகம் வேறுபட்டதொன்றன்று.

ஐம்பொறிகள் பொருள்களைத் தெரிவிப்பதினின்று திரள்கின்ற கருத்துக்களே நம் அறிவிற்கு ஆதாரமாகின்றனவெனினும், பொறிகளுக்கிலக்காகிய நிகிலப் பொருள்கள் அனைத்தும்நிலையற்றனவாதலின், அவைகளைப்பற்றிய உண்மை யிதுதானென்று உறுதியாகக் கொள்ள இயலாதென்று ப்ளேட்டோ கருதினாரென்பதைக் கூறினோம். எனினும் இதனால் இவர் மனஞ்சோர்ந்துவிட வில்லை. மற்று, இதனின்று இவர் மிகவும் முக்கியமான வோர் முடிவிற்கு வரலானார். அம்முடிவு என்னவென்று பார்ப்போம்.

முன்னுரைத்த கொள்கையின்படி பொருள்களின் உண்மை புலன்களின்மூலமாக நமக்குத்தெரியவருதலியலாதாயினும், அதனால் அறிவென்பதையே நாம் அடைய முடியாதெனஎண்ணிவிடவேண்டாவென்பதை முதலிலவர் வற்புறுத்துகின்றார். விடயங்களைப் பற்றி நாம் கிரகிக்கின்ற பொதுக்கருத்துக்கள் அல்லது உண்மைகளினின்றுதான் நமக்கு அறிவு உண்டாகிறதென்று ஸாக்ரடீஸ் கொண்ட கொள்கையை ஏற்றுக்கொண்ட ப்ளேட்டோ, அப்பொருள்களோ ஓயாமல் மாறுகின்றன என ஹீராக்ளிடஸ் உரைத்த கொள்கைக்கும் இணங்கி உடன்பட்டபிறகு, உண்மையைக் கிரகித்தல் இயலாதென்றும், ஆகையினால் அறிவினைஅடைதல் ஒருபொழுதும் ஆகாதென்றும் தீர்ந்துவிடுவதே கடனாவது போக இவர் தமக்கு உதவியாக வேறோர் கருத்தை வருவித்துக்கொண்டு அறிவின் திறத்தை அழிக்காமல் காத்தனர். எவ்வாறெனில், நம் புலன்களுக்கு இலக்காகி மாறியவண்ணமே இருக்கின்ற இவைகளேதாம் 'பொருள்கள்' என்று கொள்வது பிழையென மறுத்து, புலனுக்கேற்ற இப்பொருள்கள் கிடக்க, அறிவிற்கேற்ற பொருள்கள் வேறு இருக்கின்றனவென்னவும், புலன்களுக்குக் கோசரமாகிய இப்பிரபஞ்சத்தின் ஓயாமல் மாறிக்கொண்டிருக்கின்ற பொருள்கள் நமது அறிவிற்கு ஆதாரமாகின்றவைகளல்லவென்றும், புலனுக்கு மேற்பட்டதாய் ஒருபொழுதும்அழியாததாய் நிலைநிற்கின்றவைகளே அறிவிற்கியன்ற மெய்ப்பொருள்கள் ஆகுமென்றுஞ் சாற்றினார். அம்மெய்ப்பொருள்களை இவர் "கருத்துக்கள்" (Ideas) என்று அழைத்தனர். 'பாவனை' என்னுஞ்சொல் அவர் கருத்துடன் பொருந்தலாம். இதன்படி, புலனுலகம் வேறென்றும் பாவனைஉலகம் வேறென்றும் பிரித்துவைத்து, பாவனையுலகமேமெய்யென்றும், புலனுலக உண்மைகள் அம்மெய்ம்மையினதுஒருவகைநிழல்போன்ற தாழ்ந்ததோற்றங்களே என்றும், இப்புலனுலகப் [illegible] யின் 'போலிகள்' என்[illegible], அல்லது அப்[illegible]

M211,N28KN
N35.1.7
199205



யை ஒத்திருக்க முயல்கின்ற முயற்சி முற்றுப்பெறாமல்செம்மையற்றுக் கிடக்கும் கீழ்நிலைகளேயென்றேனும் கொள்ளவேண்டும் என்றும் இயம்புகின்றனர். ஆகையினால் அவர், பொருள்களை இருவகையாகப் பிரித்து, அவைகளைக்கிரகிக்கின்ற முறையையும்இருவகைப்படுத்தினார். மெய்யறிவானது, நிரந்தரவஸ்துவினாலாய பிரபஞ்சத்தின் பாவனைகளைச் சார்ந்ததெனவும், அதனைத்தான் 'அறிவு' என்று நாம் கொள்ளவேண்டுமென்றும்; புலன்கள் தெரிவிக்கும் உண்மை தாழ்ந்ததென்றும், அதனாலடைவது அபிப்பிராயமேயன்றி அறிவு அன்றுஎன்றும், இப்புலன்களின் இவ்வபிப்பிராயத்திற் கிடமான மாறுந்தன்மையுடைய பொருள்கள், மெய்ப்பொருள்கள் அல்லவென்றும் இவர் வகுத்துரைத்த இவைகளேயே, திருக்குறளின், 'மெய்யுணர்தல்' என்ற அதிகாரம் கூறுகின்றதென்பதில் ஐயம் பெரிதில்லை.

பொருளல்லவற்றைப் பொருளென்று உணர்தல் மருளாம் என்று கூறுகிற அவ்வதிகாரத்தின் முதற் குறள், பொருள்களின்தோற்றத்தாலேயேவஞ்சிக்கப்படுவதன் தன்மையைக்காட்டுகின்றது. பின், "இருள் நீங்கி யின்பம் பயக்கும் மருள்நீங்கி மாசறுகாட்சியவர்க்கு" என்னுங் குறள், புலன்கள் தெரிவிக்கின்ற தோற்றங்களை அறிவினால் ஆராய்ந்து தெளிய வேண்டிய அவசியத்தைச் சாற்றுகின்றது. இந்த ஐயத்தின் நீங்கித் தெளிந்தவருக்கு வானம் வையம் எல்லாம் ஒரேபொருளினாலாகின்ற உண்மைதெரியவரும் என வள்ளுவர் அடுத்தகுறளில் கூறுகின்றார். புலன்களும் அறிவுமாய்ச் சேர்ந்து உணரவருகிற இவ் வுண்மை, ப்ளேடோசொல்கிறபடி கீழ்த்தர வுண்மையே யன்றி மெய்ம்மை அன்றாதலின், ஐயுணர்வு எய்தியக்கண்ணும் பயனில்லையென்றும், அதற்கு மேலாயவொரு மெய்யுணர்வும் எய்தவேண்டும் என்றும் வற்புறுத்துகின்றார். பின் "எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப் பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்னுங்கால், புலன்களுக்கும்அறிவிற்கும் அப்பாலாகிய பொருள் ஒன்று உண்டென்னச் சாதித்த ப்ளேடோவின் 'பாவனைகளையே' திருவள்ளுவர் எடுத்துப் பேசுகின்றார் என்று எண்ணவேண்டி யிருக்கின்றது. முன் குறளில் கூறிய 'மெய்யுணர்வு' என்பதையே இங்கு 'அறிவு' என்னுஞ்சொல்லால்வள்ளுவர் ப்ளேட்டோவிற் கிணங்கப் பேசலாகின்றார் போலும். கற்றுஈண்டு அம் மெய்ப்பொருள் அல்லது பாவனையைக் கண்டவர் உய்கின்றவராவார் என்று சாற்றியிருக்கும் இது சாலச் சிறப்புடைத்து. இதன் பின்,

> ஓர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப்
> பேர்த்துள்ள வேண்டா பிறப்பு

என்னுங் குறளில், 'உள்ளது உணரின்' என்னுந் தொடரையும், அதற்குப் பரிமேலழகர், 'முதற்பொருளை யுணருமாயின்' என்று பொருள்கூறியிருப்பதையும் நோக்குங்கால், ப்ளேட்டோவின் 'மெய்ப்பொருள்'களே, இங்கு விமரிசம் செய்யப்படுகின்றன என்பது எளிதில் தெரியவரும். அதன் பின்குறளில் "செம்பொருள் காண்பது அறிவு" என வருவது பின்னும் ப்ளேட்டோவின் கருத்தையே வற்புறுத்துகின்றது. இப்புலனுலகப் பொருள்களைப் போலிகள் என்றும், செம்மையற்றவைகள் என்றும் அழைப்பதினின்று, அம்மெய்ப்பொருள் அல்லது முதற்பொருள் அல்லதுபாவனையைச் செம்பொருள்என்னும் பெயரினாற் குறித்தல் சாலத் தகும். இம்மெய்யுணர்வு அல்லது செம்பொருளறிவினால் விளைகின்ற நற்பயனை ஈற்றுக் குறள் இரண்டும் கூறுவதோடு அவ்வதிகாரமும் முடிகின்றது.

---

# கம்பராமாயணம்

## கிஷ்கிந்தா காண்டம்—9. கார்காலப் படலம்

[69-வது பக்கத் தொடர்ச்சி]

> வித்தகன் புலம்பல் விளைப்பது நகையே.

அறங்கருதுசிந்தை அந்தணரென வேழங்களும், இந்தியமவித்த யோகியவர் என்ன ஆண் குரங்குகளும், வெளியிலும் குகைகளிலும் அடங்கியிருக்கும்படி பெருமாரி பெய்யவே, ஆட வருவார் இன்மையால் சுனைகள் மாதர்தம் கூந்தலின் மணங்கொண்டு கமழாதனவாயின; இரத்தினமயமான கால்களில் கட்டிய ஊசல் வறிதாய்க் கிடந்தன; தினைப்புனங்காப்பதற்குக்கட்டியுள பரண்களினின்று இரத்தினங்கள் வீசி யெறியப்படவில்லை. தாழைமரங்களில் தழைத்த மடல்களுக்கிடையே நாரைகளின் பேடைகள், நாயகனைப்பிரிந்து தோழியர்புடைசூழ விருந்த மங்கையர் போல் அமர்ந்திருந்தன. நீர்ப்பறவைகளின் சிறகொலிகள் மத்தளமாகவும், வண்டுகளின் முரலல் இசைப்பாட்டாகவும், மயில்கள்நடனமாதரைப் போல் எங்கும் நடித்து நின்றன. மைந்தரும் மகளிரும் அகில் மணங் கமழும் பள்ளிகளை மேவலுற்றார்; தும்பிகள் சந்தன மரங்களில் தூங்கின. அன்னங்கள் தாமரையைவிட்டுச் சோலைகளில் வந்து தங்குவனவாக, நறுமணமுள்ள மரக்கட்டைகளை யடுக்கிக்கட்டிய பரண்களில் வேட்டுவமகளிர் தம் அன்பர்களுடன் துயின்றனர். சிறிய இலைகளையுடைய மரங்களின் அடியில் இடையர் தம் ஆட்டுக்குட்டிகளுடன் அமர்ந்திருந்தனர். பேய்களும் வெளிவரமாட்டாமல் ஒடுங்கிப் பசியோடு தம் பற்களை மென்றுகொண்டு கிடந்தன.

> இத்தகைய மாரியிடை துன்னியிரு ளெய்த
> மைத்தகும ணிக்குறு கைச்சனகன் மான்மேல்
> உய்த்தவுணர் வத்தினனெ ருப்பிடையு யிர்ப்பான்
> வித்தகனி லக்குவனை முன்னினன் விளம்பும்

[இத்தன்மையதான அப் பெருமழைக்காலத்தில், இருளும் அடர்ந்து நெருங்க, வித்தகனை இராமபிரான், மையெனத்தகுந்த கண்ணின் கருமணியையும், புன்சிரிப்புமுடைய மான்போன்றவளான சனகன் புதல்வியாகிய சீதையினிடத்தில் செலுத்திய உணர்வுடையவனாகி, நெருப்புப்

போன்று இடையிடையே பெருமூச்சுவிட்டு,இலக்குவனை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானான்]

சீதையைக்கொண் டேக அரக்கனுளன்; அதனைக் குறித்துப் புலம்புதற்கு இராமன் உளன்; கேட்பதற் கிளையவன் உளன், வேறினி வேண்டுமோ! பண்டே போல் இராகவன் துவக்குகின்றான். இவன் மொழிகளில் ஒன்றும் இங்கு வித்தகந்தான் காணற்கில்லையாதலின், அவன் 'வித்தகனே' யென விளம்பவேண்டியது கம்பருக் கவசியமாயிற்று. விடைவேண்டாக் கேள்விகளைக் கிளப்பிவிடுதல் வித்தகத்தின் இலக்கணம்போலும்:—

மழைக்கரு மின்னெயிற் றரக்கன் வஞ்சனை
இழைப்பருங் கொங்கையு மெதிர்வுற் றின்னலின்
உழைத்தன ளுலைந்துயி ருலக்கு மொன்றினும்
பிழைப்பரி தெனக்குமி தென்ன பெற்றியோ.

[ஆபரணங்களையணிந்த பருத்த முலைகளையுடையசீதையும்,மேகம்போன்ற கருநிறமும் மின்னல்போன்ற பற்களும் உடைய அரக்கனாகிய இராவணனது வஞ்சனைக்கு இலக்காகி, துன்பத்தால் வருந்தி வாடி உயிர் அழிவாள்; எனக்கும் எவ்வகையிலும் பிழைத்தல் அரியதாகி இருக்கின்றது. இது என்ன தன்மையோ!]

என்ன வினவுகின்றான் இராமன்.ஆயினும்,அப்பெற்றியை இளையவன்தேர்ந்துரைக்கும்வரை காத்திருக்கவில்லை.

தூநிறச் சுடுசரந் தூணி தூங்கிட
வானுறப் பிறங்கிய வயிரத் தோளொடும்
யானுறக் கடவதே யிதுவு மிங்கிலை
வேனிறத் துற்றதொத் துழியும் வீகிலேன்.

[தூய்மையான நிறமுடையனவும் பகைவரை எரிப்பனவுமாகிய அம்புகள்எனது அம்பறாத்தூணியினுள்ளே தூங்கிக்கிடக்க, ஆகாயத்தைஅளாவி விளங்குகிற வலிமையுடைய என் தோள்களோடும் நான் இந்தத் துன்பத்தையும்அனுபவிக்கக்கடவேனே. இந்தநிலையானது, வேலாயுதம் மார்பில் அழுந்தியதற்கே நிகராகவும் நான் சாகாமலிருக்கின்றேனே.]

என, தான் சாகுந்திறமில்லாமைகருதிச் சோர்வடைவான். அதுவுமன்றி,

தெரிகணை மலரொடுந் திறந்த நெஞ்சொடும்
அரியவன் றுயரொடும் யானும் வைகுவேன்
எரியுமின் மினிமணி விளக்கி னின்றிணைக்
குரீஇயினம் பெடையொடுந் துயில்வ கூட்டினுள்

[ஆண் குருவிகள், பிரகாசிக்கின்றமின்மினிப் பூச்சியாகிய அழகிய விளக்கின் வெளிச்சத்தில்,இனிமையான தம் பெட்டைக்குருவிகளுடன் தம்கூடுகளினுள்ளே சுகமாகத் தூங்குகின்றன. நானோ, மன்மதன் தேர்ந்து எய்யும் புஷ்பபாணங்களோடும் அதனாற் பிளந்த நெஞ்சோடும், பொறுத்தற்கரிய வலிய துயரோடும் இப்படிக் கிடக்கின்றேன்.]

எனக் குருவிகளைக்கண்டு பொறாமை கொண்டதையும் தன் தம்பியின்பாற் கூசாமற் சாற்றுவான் ஆம்; அரக்கரை யழித்து,அமரர் அந்தண ராதியர்தம் துயரங்களைத் தீர்ப்பதாக அக் குருவிக்கூட்டங்கள் வாக்குத் தந்ததில்லையே. அதுவும் இராமனது நினைவிற்கு வருகின்றது; வரவே,

வானக மின்னினு மழைமு ழங்கினும்
யானக மெலிகுவே னெயிற்ற ராவெனக்
கானகம் புகுந்தியான் முடித்த காரியம்
மேனகுங் கீழ்நகு மினியென் வேண்டுமால்

[ஆகாயம் மின்னினாலும் மேகம்இடித்தாலும், பற்களையுடைய பாம்பைப்போல நான் அஞ்சி வருந்துவேன்.நான் காட்டிற்கு வந்து சாதித்த காரியத்தைக் குறித்து மேலுலகமுஞ் சிரிக்கின்றது, கீழுலகமுஞ் சிரிக்கின்றது. வேறு என்னவேண்டும்.]

எனலாகின்றான். இதனில், மேல் நகுவது தெரிகின்ற அவ்வளவு தெளிவாய்க் கீழ் நகுவது எதுவென்பது தெரியவில்லை. இடிக் கஞ்சுகின்ற தம்நிலை போன்றே தம்பிரான் நிலையும் ஆயிற்றே என்று நகுவது கீழுலகத்து அந் நாகர்போலும். இராகவன் இயம்புகின்ற சொற்களுக்கேற்க மேலுங்கீழும் இழிவுசெய்கின்ற நகையினையே கண்டானெனில், பரிவுகூர்ந்து மேலுங் கீழும் நகுகின்ற நகையினைக்கண்டாரும் உளர்பிறர். தலைவன் பொருள்வயின் சென்றனனாக, பிரிந்திருந்த தலைவிக்குக் கார்கால வரவினைக் காட்டி வற்புறுத்துவாள் ஒரு தோழி,

செல்வந் தரல்வேண்டிச் சென்றநங் காதலர்
வல்லே வருத றெளிந்தாம் வயங்கிழாய்
முல்லை யிலங்கெயி றீன நறுந்தண்கார்
மெல்ல வினிய நகும்.

—கார்நாற்பது. 14.

[விளங்குகின்ற ஆபரணங்களை யணிந்தவளே, முல்லைக் கொடிகள், விளங்குகின்ற மாதர்களைப்போலஅரும்புகளை அரும்ப, அதுகண்டு நல்ல குளிர்ந்த மேகமானது மெல்ல இனிமையாகச் சிரிக்கும். ஆகையால் பொருள் ஈட்டுதல் பொருட்டுப் போயின நம் தலைவர் விரைவில் வந்துவிடுவார் என்பது தெளிந்துகொண்டோம்]

என்றுகூறினளென்று பாடினார் கண்ணங்கூத்தனார். "எல்லாவினையுங்கிடக்க எழுநெஞ்சே" என அங்கு அத்தலைவன் எழுந்து, "கடாவுக பாக தேர்" என்ன விரைதலைக்கண்டு கார்மேகம் நகைக்க,இத்தலைவியின் நிலைகண்டு இங்கு முல்லை மெல்லரும்புகொண்டு அம் மேகத்திற்கெதிர் நகைபுரிகின்ற செய்தியைச் செப்புகின்ற தந்தச்செய்யுள்.இராமபிரான் இங்கு மேலுங் கீழும் நகைப்பதற் கிலக்காயது அத்திறத்த தன்று. நெஞ்சிற் கரவுடைய நாகத்திற்குத் தன்னை நிகராகக் கூறியதற்கே மேலுங்கீழும் மற்றைத்திசையனைத்தும் நகுகின்றன. இதனை மறப்பதரிது; ஆதலின்,

மறந்திருந் துய்கலேன் மாரியீ தெனின்
இறந்துவிண் சேர்வது சரத மிப்பழி
பிறந்துபின் தீர்வதோ பின்ன ரன்னது
துறந்துசென் றுறுவலோ துயரின் வைகுவேன்

[துயரத்தில் தங்கியிருக்கும்நான்,இதனை மறந்திருந்து பிழைக்கமாட்டுவேன் அல்லேன். மாரிக்காலம் இத்தகையதுஎனின், நான்இறந்து மேலுலகம்அடைவதுநிச்சயம்; இந்தப்பழியை வேறு பிறவி எடுத்துத்தான் தீர்க்கக் கூடுமோ, அல்லது அந்தச் சென்மத்திலும் துறவறம் பூண்டு தான் இதனைத் தொலைக்கக்கூடுமோ]

என்பான். இப்பழிதீர,மறுபிறவியும்அதனில் ஓர் துறவும் வேண்டுவதல்லது, இப்பிறப்புவீணேயாகுமென்னற்குக் காரணமுங் கூறுவான்.

ஈண்டுநின் றரக்கர்த மிருக்கை யாமினிக்
காண்டலிற் பற்பல காலங் காண்டுமால்



வேண்டுவ தன்றிது வீர நோய்தெற
மாண்டனெ னென்றது மாட்சிப் பாலதால்

[வீரனே, இனி நாம்இவ்விடத்திலிருந்து அரக்கர்களுடைய இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க ஆண்டுகள் பற்பல கழிந்துவிடும்; ஆகையால், இந்த முயற்சி வேண்டா. இத் துயரம் தாங்கமாட்டாமல் மாண்டேன் என்பதேபெருமையுடையதாம்]

என்றனன். ஒன்று செய்யக் காலம் பல ஆகுமாதலின் அதனைச் செய்வதின்றிச் சாதலே மாட்சியாம் என்று இராமனையே சொல்லவைத்த அம்மாரி மிகப் பெருமாரியாதல்வேண்டும். ஆயினும், முன்னைநாள் பெற்றவோர் இன்பத்தை மீண்டு பெறுவதற்கிருந்த மறுநாள் நெடுந்தூரத்திற் கப்பால் கிடக்குமாயின் பொறுமை யிழத்தலும் மக்கட்குரியதே.

செப்புருக் கனையவிம் மாரிச் சீகரம்
வெப்புறப் புறஞ்சுட வெந்து வீவதோ
வப்புருக் கொண்டவா ணெடுங்க ணாயிழை
துப்புருக் குமுதவா யமுதந் துய்த்தயான்

[அம்பின் வடிவத்தைக்கொண்டுள்ள ஒளி பொருந்திய பெரிய கண்களையுடைய, ஆராய்ந்தெடுத்தஆபரணங்களையணிந்த, சீதையின் பவளம்போன்ற உருவத்துடன் செவ்வாம்பல்போன்ற அதரத்தின் அமுதத்தைப் பருகி இன்பமனுபவித்தவனான நான், இம் மழைத்துளிகள் செம்பை உருக்கிச் சொரிவதுபோல என் உடம்பை எரிக்க வெந்து அழிவதோ]

என ஏங்குவான். ஆம், அதற்கென்செய்வது! "மாயமானை நீயே பிடித்துத்தா" என்றதும் அக்குமுதவாய் நின்று வந்த அமுதமே. எனின்,

நெய்யடை தீயெதிர் நிறுவி நிற்கிவள்
கையடை யென்றவச் சனகன் கட்டுரை
பொய்யடை யாக்கிய பொறியி லேனொடு
மெய்யடை யாதினி விளித னன்றரோ.

[நெய்சேர்ந்த ஓமாக்கினியின்முன் சீதையை நிறுத்தி, உனக்கு இவள் அடைக்கலப்பொருள் ஆவாள்என்று முன் என்னைநோக்கிச் சொன்ன அந்தச் சனகனதுஉறுதிமொழியைப்பொய்யாக்கிவிட்ட, நல்வினை இல்லாதவனாகிய என்னிடத்தில் சத்தியமென்பதுஅடையாது; ஆதலால்இனிச் சாதலே நன்று.]

என இயம்பியது நேரன்று. கையடைப் பொருளைக் காப்பவன் ஒருவன், அப்பொருள்தான் வேறொன்றினை விரும்பி வேண்ட, அதனைக் கொணர்ந்து தருவதற் கிசைந்து அகன்றபோது, கையடை களவுபோமெனின், அதனாலிவன் கடமை இழுக்குற்றதென்னலாகாது. அது எவ்வாறாயினும், தன்வயின் இனி மெய்யடையாதென்று இராமனே விளம்புகின்றான்; ஆதலின், முன்னே கூறியவைகளையேனும், விளிதலே நன்று என்று பின்னே கூறுவதையேனும் ஒருவரும் நம்பவேண்டா. வேறென்! இப்புலம்ப லத்தனையும் பொய். ஏனிப்பொய் சொல்கின்றா னென்னற்குரிய செய்தியுஞ் சொல்கின்றான்.

தேற்றுவாய் நீயுளை யாகத் தேறிநின்
றாற்றுவே னுளனுளை வாய்வளை
தோற்றுவா ளல்லளித் துன்ப மாரினி
மாற்றுவார் துயர்க்கொரு வரம்புண்டாகுமோ.

[தேற்றுவதற்கு நீஇருக்க, அதுகேட்டுத் தே[illegible] றுத்திருப்பதற்கு நானும் இருக்க, ஆராய்[illegible]யல்களையணிந்த சீதை இங்குவந்து தோன்றாமலுமிருக்க, இத்துன்பத்தையார் இனிமாற்றுவார்? இத்துயரிற்கு ஓர் எல்லையும் உளதோ]

என்று வினவுகின்றான். இதனைப்பாடுவதற்குக் கம்பரும் இருக்கின்றார், படிப்பதற்கு நாமும் இருக்கின்றோம், எனினும் இதற்கு வரம்பும் உளது—இரண்டே செய்யுள்—அதற்குள்,

விட்டபோர் வாளிகள் விரிஞ்சன் விண்ணையுஞ்
சுட்டபோ திமையவர் முதல தொல்லையோர்
பட்டபோ துலகமு முயிரும் பற்றறக்
கட்டபோ தல்லது மயிலைக் காண்டுமோ

[நான் இனி விடுகின்ற போரிற்சிறந்தஅம்புகள் பிரம்மலோகத்தை [illegible]த்தபோதும், பழமையான தேவர் முதலியோர் அழிந்தபோதும், உலகங்களையும் உயிர்களையும் மிச்சமில்லாமல் அழித்தபோதும் அல்லாமல் மயில்போன்ற சீதையைக் காண்போமோ]

என்றோர் வீரப்பொய்யும் விளம்பிவிடுகின்றான். உலகத்திற்குத் தீவைத்து ஒருபொருளைத் தேடுவார் வித்தகம் எத்தகைத்தென வேண்டுமோ. இவ்வித்தகன் இன்னது செய்யாமைக்குக் கூறுங் காரணம் பின்னருஞ் சுவையுடைத்து—

தருமமென் றொருபொரு டன்னை யஞ்சியான்
தெருமரு கின்றது செறுநர் தேவரோ
டொருமையின் வந்தன ரேனு முய்கலார்
உருமென வொலிபடு முரவி லோயென்றான்.

[இடிபோல்முழங்குகின்றவலிய வில்லையுடையவனே, தருமம் என்றவொரு பொருளிற்கு அஞ்சியே, நான் அவ்வாறு உலகங்களை அழிக்காமல் கலங்கிநிற்கின்றேன்; மற்றபடி,நம் பகைவர்கள் தேவர்களோடு சேர்ந்துவந்தாலும் தப்பிப் பிழைக்கமாட்டார், என்று கூறினான்]

தருமத்திற்கு 'அஞ்சியே' தானொன்று செய்யாதிருப்பதாகச் சொல்கின்ற வொருவனையும் ஒருபோதும் நம்பவேண்டா. இதனை யாரேனும் நம்பிவிடப் போகின்றார்களே என்னப் பயந்துதான், முன்னரே, 'தன்பால் மெய்யடையாது இனி' என்று இராமன் வற்புறுத்திவைத்தான் போலும். செய்வதற்கு ஆற்றாததையேனும், செய்தும் பயனில தாவதையேனும் செய்யாமைக்கே தமக்குத் தருமத்தின்பால் உள்ள அச்சத்தைக் காரணமாகச் சாற்றுவார் மாந்தர். இராமன், இங்குத் தான் 'மனிசன்' என்றே மாயங்கள் செய்யப்புகுகின்றானாதலின் அவன் வாய்நின்றுஇவையனைய வார்த்தைகள் வரலாகின்றன. எம்பெருமான் தான் பூண்டுள வேடத்திற் கிணங்கச் சில சொல்லி இங்குப் புலம்பவேண்டியிருக்கிறது.மற்று, அவனோ வித்தகன்; வித்தகர், துன்பத்திலும் தூய இன்பமே காண்பாராதலின், மனமார எங்ஙனம்புலம்பமாட்டுவார்? ஆதலாற்றான் இங்கு இராமன், தன் வேடத்தைச் சுவையுற நிறைவேற்ற இயலாமல் ஒன்றல பல உரைத்துரைத் துழல்பவனாகின்றான். எனின், இம் மொழிகளை மதியாமல் தன் தம்பி ஒருகால் தன்னைத் தேற்றுவதின்றி விட்டுவிட்டால் என்செய்வதென்று ஐயுற்றான்போல், "தேற்றுவாய் நீயுளையாகத் தேறிநின்றாற்றுவேன் நான் உளன்" என்று வற்புறுத்திய [illegible]வும் ஆதல்கூடும். இத்தூண்டலை தலைமேற்கொண்டு [illegible]வனும் இனித் தேற்றத் துவக்குகின்றான்.

199205

# ஒத்தெல்லோ

[Shakespeare's—"Othello"]

அங்கம் 1. களம் 3.

[92-வது பக்கத் தொடர்ச்சி]

தலைவர்:—டெஸ்டிமோனவை இங்கே அழைத்து வாருங்கள்![1]

ஒத்தே:—பதாகையாள, இவர்களுக்கு வழிகாட்டிச் செல்; அவ்விடத்தினை நீ நன்கு அறிவாய்.[2]

[இயாகோவும் ஏவலாளர்களும் போகின்றனர்]

அவள் வரும்வரையில், என் இரத்தத்தின் குற்றங்களைக் கடவுளிற்குமுன் எத்துணை உண்மையாக ஒப்புக்கொள்வேனோ, அவ்வளவு நேர்மையாக, இவ் வழகிய நங்கையின் காதலில் நானும், எனதில் அவளும், எவ்வாறு செழித்தோம் என்பதையும் தகவுசான்ற நும் செவிகளுக்குச் சமர்ப்பிக்கின்றேன்.[3]

தலைவர்:—சொல் அதனை, ஒத்தெல்லோ.

ஒத்தே:—அவள் தந்தை என்பால் அன்புவைத்தார்; அடிக்கடி என்னை அழைத்தார்; என் வாழ்நாட் சரிதத்தில், நான் கடந்த போர்களையும் முற்றுகைகளையும், அதிர்ஷ்டங்களையும் பற்றி, ஆண்டு ஆண்டாய், மீண்டும் கேட்டார்[4]. என் பிள்ளைப்பருவமுதல், அவ ரென்னைச் சொல்லும்படி விதித்த அந்நிமிடம்வரை, அதனை நான் புகன்றுபோந்தேன்: மிக்க கிரகசாரமான சம்பவங்களையும்[5], நீரிலும் நிலத்திலும் நேர்ந்த அசைக்கின்ற கண்டங்களையும்[6], மரணத்தருண உடைப்பினின்று மயிரிழையிடைத் தப்பியவைகளையும்[7], இறுமாந்தபகைவனால் பற்றுண்டு அடிமையாய்விற்கப்பட்டதும் அதனின்றுநான் மீட்கப்பட்டதும், என் தேச சஞ்சாரச் சரித்திரத்தின் உற்பாதங்களும் பற்றிப் பேசினேன். அதனில்[8], மிக அகன்ற குகைகளையும் வறிதாய பாலைவனங்களையும், முரடான கற்சுரங்கங்களையும், பாறைகளையும், சிரங்கள் விசும்பினைத் தொடும் மலைகளையும்—இம்முறை அன்னதாக[9]— ஒருவரை ஒருவர் புசித்த ஆள்தின்னிகளையும், ஆந்தரபோபாகைகளையும், தம் தோள்களுக்கு அடியில் தலைகள் வளர்கின்ற மனிதர்களையும் பற்றிப் பேசுவது என் சந்தர்ப்பமாயிற்று[10]. இதனைக்கேட்க டெஸ்டிமோன கருத்துமுற்ற இசைவாள்: எனினும், வீட்டுக்காரியங்கள் இதனை விட்டு அவளை அடிக்கடி இழுத்துவிடும்; அதனை அவள் வேகமாய்முடிக்கக்கூடியபோதெல்லாந்திரும்பிவந்து, பேராவலுடைய தன் காதுகளால், நான் பேசுகின்றவைகளைவிழுங்கிவிடுவாள்[11]. அதனைநான்கவனித்து, இணங்கிய வேளையொன்று கைப்பற்றி, மனப்பூர்த்தியின்றி ஏதோ துண்டுதுண்டாகத் தான் கேட்டிருக்கின்ற என் யாத்திரையையெல்லாம் நான் விவரித்து உரைக்க இசையவேண்டுமென்றவோர் ஆர்வமுடைய

(1) டெஸ்டிமோனவை அழைத்து வந்து அவளைக் கொண்டே, எமக்கிடையே யாது நிகழ்ந்ததென்பதைத் தெரிந்துகொள்ளுங்கள், என்று ஒத்தெல்லோ சொன்னதற்கிணங்கித் துரைத்தனத்தலைவர், ஏவலாட்களை அனுப்புகின்றார்.

(2) பதாகையாளன் - படைத்தலைவனுக்குமுன் கொடி தாங்கிச்செல்லும்உத்தியோகத்தனாகிய இயாகோ. டெஸ்டிமோன இப்பொழுது இருக்கின்ற ஸாஜிட்டரி என்னும் பெயருடைய விடுதியை இவர்களுக்குக்காட்டு-என்கிறான்.

(3) எங்கள்காதல் எவ்வாறுபிறந்து எவ்வாறுவளர்ந்தது என்பதை, டெஸ்டிமோன இங்கு வருவதற் கிடையில், சொல்கின்றேன் - என்பது பொருள்.

இரத்தத்தின் குற்றங்கள் - இரத்தக்கொழுப்பினால்ஒருவன் செய்யுங் குற்றங்கள். காமம்கோபம்முதலியன இரத்தத்தின் மிகுதியினால் நேரும் என்பர்.

ரோமன்காதலிக் கிறிஸ்தவமதத்தினர், தாம்அன்றன்று செய்த பாவங்களைக் கடவுளின்முன் உண்மைமாகக்கூறி ஒப்புக்கொள்ளவேண்டும் என்பது விதி.

ஒன்றையும் மறைக்காமல் கடவுளின்முன் என்குற்றங்களை ஒப்புக்கொள்வதேபோல், நாங்கள் இருவரும் ஒருவர் காதலில் ஒருவர் செழித்துவளர்ந்தவிதத்தினை முற்றிலும் உண்மையாக உரைக்கின்றேன்.

எனதில்-என்காதலில். தகவுசான்ற-பெருமைபொருந்திய.

(4) அழைத்தார் - அவர்மனைக்கு வரும்படி அழைத்தார். அதிர்ஷ்டங்கள் - நலந்தீதுகள். ஆண்டு ஆண்டாக - வரிசையாக வருடத்திற்கு வருடம் நடந்தபடி.

(5) ஜாதக கிரகங்களால் நேர்ந்தவைகள்—கிரகங்களுக்கும் மனிதவாழ்க்கைக்கும் சம்பந்தம் இருக்கின்றதென்பதை மேனாட்டாரும் நம்பியிருந்தனர்.

(6) அசைக்கின்ற கண்டங்கள்—கேட்போர்மனத்தை ஆச்சரியம் பயம் இரக்கம் முதலியவைகளால் அசையும்படி செய்கின்ற ஆபத்துக்கள்.

(7) உடைப்பு - முற்றுகையிட்டவர் மதிலை உடைத்து உண்டாக்கிய வழி. மரணத்தருண உடைப்பு-அவ்வுடைப்பின்வழி பகைவர் உள்ளேவந்து கொல்கின்ற சமயம்.

மயிரிழையிடை தப்புதல் - மரணத்திற்கும் தனக்கும் ஒருமயிரிழையே இடையிருக்க அதற்குள் தப்பிடுதல்.

(8) அதனில் - அச்சரித்திரத்தில் - பேசுவது-சந்தர்ப்பமாயிற்று - என்று முடித்துக்கொள்க.

(9) இது இடைப்பிறவரல் - நான் சொல்லிவந்த முறை அவ்வாறு இருந்ததால் நான் இவைகளைச் சொல்லவேண்டியதாயிற்று—என்பது பொருள்.

(10) ஆந்தரபோபாகை - என்பது ஒரு சாதியாரின் பெயர்; இவர்களும் ஆள்தின்னிகள்.

ஷேக்ஸ்ப்பியர் காலத்தில், மேனாட்டவர் உலகத்தைச் சுற்றிப்பார்ப்பதற்குக் கப்பல்பிரயாணஞ் செய்து திரும்பி வந்து, ஆள்தின்னிகள், தலையேயில்லாதஜனங்கள், தோள்களுக்குக்கீழே தலைவளர்ந்திருப்பவர்கள் முதலியவர்களைக் கண்டதாக அதிசயங்கள் கூறுவர். அவ்வழக்கத்தை ஒட்டி ஷேக்ஸ்ப்பியரின் ஒத்தெல்லோவும் இவைகளைச் சொல்கின்றான்.

(11) தந்தையினிடம் நான் இக்கதைகளைச் சொல்லிக்கொண்டிருக்கும் போது, டெஸ்டிமோன அடிக்கடி தன் வீட்டு வேலைகளைக் கவனிப்பதற்காகப் போய்ப்போய்த் திரும்பிவந்து, என்பேச்சை ஆவலுடன் கேட்பாள்.

இதனைவிட்டு - என்பேச்சை விட்டு. அதனை - வீட்டு வேலையை.

(12) இடையிடையே விட்டுவிட்டுக் கேட்ட என்கதையை நான் முழுவதும் தொடர்ச்சியாய்ச் சொல்லவேண்டுமென்று அவள் என்னைப் பிரார்த்திக்கும்படி வழிதேடிக்கொண்டேன் - என்பது கருத்து.

அதனை நான் கவனித்து - என்பேச்சை அவள் ஆவலுடன் கேட்கின்றாள் என்பதுதெரிந்துகொண்டு, இணங்கிய வேளை யொன்று கைப்பற்றி - நான் சொல்வனவற்றை அவள் ஏற்றுக்கொண்டு என்வழிப்படக்கூடியவளா யிருந்த சமயம் வாய்த்தபோது, அதனை வீணாக்காமல் கைப்பற்றி.

மனப்பூர்த்தியின்றி - இடையிடையே விட்டுப்போன தால் [illegible]யடையாதபடி.



இதயத்தின் பிரார்த்தனையை அவள்கின்று இழுப்பதற்கு நல்வழி நாடிக்கொண்டேன்[12]. இவ்வினோர் நான்.[13] என் இளமை வருந்திய யாதானுமொருநல் பஞ்செய் ஆபத்தை நான் சொல்லுங்கால் அவள் தன் கண்ணீர்த்துளிகளைப்பன்முறை வஞ்சித்துளேன்[14]. என் சரித்திரம் முடிவடைந்தவுடன், என்னுடைய சிரமத்திற்குக் கைம்மாறாக உலகளவு பெருமூச்சுகளை எனக்குத் தந்து உதவினள்[15]. "உண்மையாகவா," "என்ன ஆச்சரியம்," "அளவு கடந்த ஆச்சரியம் அது"; "வருந்தத்தக்கது அது", "இது நிரம்ப வருந்தத் தக்கது"—என்றெல்லாம் சாற்றுவாள்[16]. இதனைக்கேட்கா திருந்திருந்தால் ஆகாதா, என்பாள்; எனினும், தெய்வம் தன்னை அத்தகையவோர் ஆடவனுப் செய்திருந்தாலாகாதா என்றும் விரும்புவாள்[17]. எனக்கு வந்தனமளிப்பாள்; தன்னைக் காதலிக்கு நண்பன் ஒருவன் எனக் கிருப்பானாயின், என்னுடைய கதையை எவ்வாறு சொல்லுவதென் றவனுக்குக் கற்பித்தால் போதுமென்று கட்டளையிட்டு, அதுவே தன்னைக் காதலுக் கிணக்கிவிடுமென்று கூறுவாள்[18]. இந்தக் குறிப்பின்மேல் எடுத்துப் பேசினேன் நான்[19]. நான் பட்டுக்கடந்த விபத்துக்களுக்காக அவள் என்னைக் காதலித்தாள்; அவைகளின்பொருட்டு அவள் இரங்கியதற்காக நான் அவளைக் காதலித்தேன்: நானுபயோகித்தஒட்டியம் இதுதான்[20]. இதோ வருகிறாள் நங்கை; அவளே இதற்குச் சாக்ஷியாகட்டும்.

என் யாத்திரையெல்லாம் - நான் செய்த யாத்திரையில் நிகழ்ந்தவைகளையெல்லாம்.

நான்...நாடிக்கொண்டேன்-ஆர்வமுடையவளாய் முழு இதயமுடன் என்னை அவள் வேண்டிக்கொள்ளும்படிசெய்தேன்.

(13) நானே தூண்டித் தூண்டி வருவித்த அவ்வேண்டுகோளிற்கு இணங்கினேன்.

(14) கண்ணீர்த் துளிகளை வஞ்சித்துளேன் - அவளையும் அறியாமல் கண்ணீர் வடிக்கும்படி செய்துளேன்.

(15) என்கதை முடிந்ததும், நான் பட்டகஷ்டங்களுக்காகப் பரிந்து, அவள் விட்ட பெருமூச்சுக்களைக் காண, நான்பட்ட அக்கஷ்டங்களையும், அதனை இப்பொழுது சொன்ன சிரமத்தையும், எல்லாம் மறந்து மனமுவந்தேன் - என்பது பொருள். உலகளவு என்பது இங்கு மிகுதியைக் குறிக்கும் பொருளது.

(16) ஒத்தெல்லோ தன் கதையைச் சொல்லிவந்தபொழுது, அதனில் ஈடுபட்ட டெஸ்டிமோன இடையிடையே வினவியவை இவை.

(17) நான் பட்டகஷ்டங்களைக் கேட்டு வருந்தி அவள், 'இதனைக்கேட்கா திருந்திருந்தாலேநலம்' என்பாளாயினும், தான் புருடனாய்ப் பிறந்திருந்தால் அவ்வாச்சரியங்களைப் பார்த்திருக்கலாமே என்று ஆசையும் படுவாள்.

(18) "ஒத்தெல்லோ, உன்சரிதம் என் மனதைக் கவர்கின்றது. உன் நண்பர்களில் யாரேனும் என்னைக்காதலிப்பவனாகி, என் காதலை எவ்வாறு பெறுவது என்று தெரியாமல் ஏங்கி இருப்பானாயின், உன்னுடைய இக்கதையை என்னிடத்தில் சொல்லும்வகை நீ அவனுக்குக் கற்பித்து வைத்தாற் போதும். உன்கதையைச் சொல்பவனை நான் உடனே காதலித்துவிடுவேன்" என்று டெஸ்டிமோன கூறினாளென்று ஒத்தெல்லோ சொல்கிறான்.

(19) 'உன்னை நான் காதலிக்கின்றேன்' என்று நேராகக் கூறாமல் மறைமுகமாக அவள் அதனையே சாற்றுகின்றாளென்ற அவள் குறிப்பினைத் தெரிந்துகொண்ட நான் என் காதலை விளம்பினேன்.

(20) இருவரும் காதல் கொண்டதன்றி, மாய மந்திர வித்தைகள் யாதும் நடைபெறவில்லை-என்பது பொருள்.

---

# வில்லி பாரதம்

[illegible]—இராசராசன்.

[[illegible]-வது பக்கத் தொடர்ச்சி]

தனகம்[illegible] [illegible] பிறர்மனத்தை வருத்தாத கொள்கையன் இத்துரியோதனன் ஆதலைக் கண்டோம். இனி,

> செறுத்தவர்தம் பெருவாழ்வு முயிரு மாற்றிச்
> சேர்ந்தவர்கள் புரிந்தபெரும் நிமை யெல்லாம்
> பொறுத்துலக முழுதாளும் நிகரிலோய்!

என்று புகழப்பட்ட இராசராசன், சரித்திரத்திற்குத் தெரிந்த மகுடாதிபதிகள் பலருடைய நாளோலக்கத்திற்கும் சிறப்புச்செய்யவல்ல பெருமைவாய்ந்த தன் சபையோரிடம் என்னவாறு நடந்துகொண்டு தனது சக்கரத்தைச் செலுத்திவந்தான் என்பதையு மாராய வேண்டும். துரோணனிடம் சுயோதனனுக்கு மிகுந்த பணிவும் மதிப்பும் உண்டு. மூவுலகையும் வென்றி கொள்ளத்தக்க ஆற்றலும், மற்று, தன்னலம்கருதாத குணமும் உடையவன் துரோணன் என்பதைத் துரியோதனன் நன்கு அறிவான். ஆயினும், அவனுக்குப் பாண்டவரிடம் இருந்த அன்பும், அதனால் அவன் 'தாமரையிலைத் தண்ணீரென'ப் பற்றில்லாமல் போர் புரிதலும்இவனுக்குத்தெரியாமலில்லை. மற்று, பாண்டவர்களிடம்அன்புடையானெனினும், விதுரனைப்போலவனையும் பகைத்துக்கொள்ளலாகாது. ஏனெனில், விதுரன் அரசவையில்அரசனைஎதிர்த்துமதிகூறுவது போலத் துரோணன் கூறுவதில்லை. அதுவுமல்லாமல் செஞ்சோற்றுக்கடன் கழிக்கின்ற வீரனும் அத் துரோணன், தன்பக்கல் மடிவானன்றி விதுரனைப்போல் பகைவருக்குத் துணையாகமாட்டானென்று நினைத்தான் இராசராசன். ஆதலினால் அவனைப் பழிப்பதில் பயனில்லையென்றறிந்து அவனைத் தன்னிடம் பிணிப்பதற்கானமுறைகளைச் செய்வதே ஏற்புடைத்தென இராசராசன் அவ்வந்தணனுக்கு அளவற்றஉபசார வார்த்தைகளும், வரிசைகளும் வழங்குகின்றான். பதினொன்றும் நா ளிரவு துரோணன், 'நாளைப் போரில் இங்கிருக்கும் மற்றை வீரர்கள் விசயனையும் வீமனையும் தருமனிடமிருந்து விலக்குவரேல், அத்தருமனை எளிதில் அகப்படுத்தித் தருவன்' என்று வாக்களித்தபோது, சுயோதனனும் இவ்வளவேனுமிவன் வாய்விட்டுக் கூறினனேயென்று உவந்து அவனுக்குப் பல உபசார மொழிகளும் இயம்பியதுமல்லாமல் எல்லா அரசர்களையும் அவனை வணங்கிச் செல்லுமாறு கட்டளையிட்டு,

> வெவ்வே றுரைத்த வேந்தர்க்கு.
> வேண்டும் சிறப்புச் செய்தகற்றிக்
> கைவார் சாப முனிவரன்தன்
> கழற்கால் வணங்கி ஏகுகெனச்
> செவ்வாய் மலர்ந்து மானத்தால்
> திறலால் வாழ்வால் செகத்தொருவர்
> ஒவ்வா வரசன் தன்கோயில்
> அடைந்தான் விபுதர்க் கொப்பானே

என்றபடி, துரோணனுக்குப் பொருந்திய துணையை அமர்த்திக்கொடுத்தான். இவ்வாறு இவனுக்குமட்டுமேயன்றி ஏனைய வீரர்களுக்கு மவர்களுக்கு வேண்டியவற்றை அமர்த்திக்கொடுப்பதிலும், வேறுபற்பல வகைகளில் உற்சாகமூட்டுவதிலும் தனக்குநிகராரும் இல்லாத இவன், எத்தனைச் சாகசஉரைகள் பயின்று தேர்ப்பாகனொருவனைக்கன்னனுக்கு அமர்த்துகிறுன் என்பதுதான் தெரியுமே. ஆயினும், அம்முயற்சிகள் பயனிலாதொழியும்படி அவர்கள் தோற்றுத்திரும்பினுலுங்கூட இராசராசன் அவர்களிடம் மிகுதியாக வெகுள்வதில்லை. இவ்விஷயத்தில் இவனுக்கும் இராவணனுக்கும் பேதமுளது. பதினைங்காம்நாள்போரில் கன்னன் வீமசேனனுல் பலதரம் அடியுண்டும் அவனிடம் சிறிதேனும் வெறுப்புருமல் மீண்டும் மீண்டும் தன் தம்பியரை அவனுக்குத் துணையாகச்செலுத்திய இவ்விராசராசனது அருமைப் பெரு நோக்கினையும், போரில் தோற்றுத் திரும்பிவந்த தன்சேனைகளை மூக்கறுக்க ஏவிய இராவணனது மிலேச்சப்பான்மையையும்ஒப்பிடுக. இராவணனது முறை, மூன்றும் பானிபட் யுத்தத்தில் பகைவனுக்குப் புறந்தந்தோடிவந்த தன்படைஞரில் ஒருவரில்லாமல் வெட்டியொழிக்கக் கட்டளையிட்ட அகமத்ஷா அப்தல்லி என்பவனது படைமுறையாம்; அல்லது, பிருதிவி அரசனிடம் தோற்றுத்திரும்பிய தன் சேனைவீரர்களைக் கழுதை மீது ஊர்வலம் நடத்திய முகம்மது கோரியின் முறையெனினும் அமையும். துரியோதனனது முறையோவென்னின் நாகரிகமிகுந்த முகலாய அரசியல் முறை; மேல்பதவி மறுத்தல், வெகுமதி யளிக்காதிருத்தல், கண்ணோட்டமில்லாமை முதலிய சிற்சில தண்டனைகளையே பெரும்பாலும் கையாளும் முறை*. அம்முறைப்படியே, பன்னிரண்டாம்நா ளிரவு துரோணன் தன் வாக்குறுதி நிறைவேருமல் பாசறை நண்ணிய பொழுது, அரசன், 'நென்னல் நீயுரைத்த வாய்மை நிலையானதே' என்றொரு கூரிய வார்த்தையைத்தவிர வேறொன்றும் மொழிந்திலன். அரசனது உரைகளை வெட்டவெளிச்சமாக விரித்துக்கூறுவதில் நிபுணனுகியகன்னன் மறையந்தணர்க் கென்னகட்டாண்மையுண்டு'' என ஏசிச் சிரித்தான். துரோணன் வெகுண்டு 'நன்றல்ல வீரத்தில் ஓரம் சொல்லுதல்' என்று தொடங்கி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தியதை, 'சேர்ந்தவர்கள் புரிந்தபெருந் தீமையெல்லாம் பொறுத்துலகமுழுதாளும் இத் திகிரியோன்' தான் மிகப் பொறுமையுடன் கேட்டுக்கொண்டு வாளாவிருக்கலாம்.

அதற்கு மறுமொழியாக மனங்கசிந்து ஏதேனும் உரைத்தாலது பின்னும் பகைமையைப் பெருக்குமேயொழிய இல்லாத அன்பை இபற்ருதென்றுணர்ந்து வாளாவிருந்த இராசராசனது மனப்பான்மைக்கும், பழுதிலாத வீரனுகிய தன்மைந்தன் போர்பல புரிந்து தோற்றுத்திரும்பி, 'கொடு வினையால் நாம் குலப்பழி தேடிக்கொண்டோம் இனிமேல் சமரசம் பேசுதலே தகுதி' என்னக் கூறியபோது, 'நீயும் இதுவரையில் மாண்ட வீரரும்வெற்றிகொள்வீர்களென்றோ இவ்வலிய பகையைத் தேடிக்கொண்டேன்; நான் பகை கொண்டது என் தடந் தோள்களை நம்பியே; வருக, தேர் தருக' என்று மருட்டிய இராவணனது மனப்பான்மைக்குமுள்ள பேதத்தைக் காண்மின். மேலும் இவனலமேகருதி உயிரீந்த தன்மகன் இந்திரசித்தும் தம்பிகும்பகர்ணனும் இவனுக்குமதிகூறும்பொழுது பொறுக்க முடியாமல் எவ்வளவு சீறி விழுகின்றுன் இராவணன்? மற்று, அசுவத்தாமன் துரோணன் வீடுமன் முதலியோருடைய புத்திமதிகளைக்கேட்டுப் பொறுத்துக்கொண்டு அவரவர்க்கு ஏற்றவாறு இன்சொல்வழங்கும் மன்னனது குணத்தைநோக்குமின். இதனுல் இத் துரியோதனன் மிகுந்த பெருந்தன்மையையும் நற்குணமும் கொண்டவன் என்று கூறுகின்றேனில்லை; இது, நற்குணம்போன்றும், பெருந் தன்மைபோன்றும் பிறருக்குத் தோற்றும்வண்ணம்செய்கின்றவொரு தந்திரமே. அதனுற்றுன் துரியோதனன் மேற்கூறியவாறு வாளாவிருந்ததே சிலையாசிரியனுக்கு மனத்தாங்கலாயிருந்தது. தான் தோற்றுவந்ததுமல்லாமல், வெகுண்டு உரைசெய்த இச் சொற்களையும் பொறுப்பான் அரசனுகில், அவ்வரசனுக்கு நாம்இவ்வாறு பிழையியற்றுவதே என்னும் விசனம் மிக்கது. அதனுற்றுன் மறுநாட் போரில்,

> நெஞ்சவ ராலழி வுண்டத
> போதனன் நெருந லினுங்கடுகிப்
> பஞ்சவர் கோமுதல் வன்தனை
> வன்பொடு படைபொர வெண்ணினனே

என்றபடி வன்பு மிக்கோனு யிருந்தான் துரோணன். ஆயினும், அத்தகைய உரோஷம், திட்டத்துய்மனைச்

> சிந்தையும் மானமும் வீரரும்
> விட்டொரு செயலற வென்னிடச்

செய்தவுடன், அணைந்தும் விட்டது. அதனுல் அபிமனோடு போரிட்டபோது, களைப்பும் சிறிது மிக, புறந்தந்தோடினுன். சற்றுநேரத்திற்கெல்லாம் இலக்கணகுமாரன் அபிமனது கணைக் கிரையானதும், சுயோதனன் மனங்கசிந்து உரைத்தவார்த்தைகளைக் கேட்டுத் துரோணன் மறுபடியும்போராவேசமுற்றுப் பல துணை வீரர்களுடன் சென்று அபிமனைத்தாக்கினுன். இப்பொழுதும், அபிமனை ஒரு கரம் கழித்தவுடன் பழைய கழிவிரக்கம் மிக, முன்போலப் போர்க்களம் விட் டோடினுன்.

யாவற்றையும் கண்ணுற்ற இராசராசன், இவ் வில்லாசிரியன் போருணர்ச்சியினுல் தூண்டப்படுபவன் என்றும், தளர்ச்சியில்லாமல்போர்புரிவானே லிவனை வெற்றிகொள்ளுத லென்பது அரிதென்னவும், ஆயினும் போர்க்களத்தில் புகுந்த சிறிது நேரத்திற்கெல்லாம் களைத்துவிடுகின்றுனுதலின் அவனுல் ஒன்றும் இயற்ற இயலாமற்போகிறதென்றும் நன்கு உணர்ந்தான். ஆதலின், மற்றுநாள் சயிந்தவனைக் காக்க நேரிடும்போது, யுத்தத்தின் தொடக்கத்தில் கிரீடி சிலையாசிரியனை எதிர்ப்பானுகில் திட்டமாக அக்கிரீடி தோல்வியுறுவான்என்பதையுன்னினுன். உன்னி, கடோற்கசன் [illegible]துபோந்து, விசயன் சபதம்செய்து கைலாயத்திற்குச் சென்றிருப்பதைக் கூறக் கேட்டவுடன் மற்றைநாட்காலை சிலையாசிரியனது துணை வேண்டியிருந்

* ஆனுல், படைமுறைகளில் அகமத்ஷாஅப்தல்லியின் படைமுறையே சிறந்ததென்பதிலும் ஐயமில்லை. சேனைகளின் ஒழுங்குமுறைஅது. அம்முறையைத்தான் Military Discipline என்பார்கள். மற்று, முகலாய ராச்சியத்தின் அழிவுக்குக் காரணமாயிருந்ததுஇவ்வொழுங்கின்மையே. பிறந்தினப் பரிசு முதலான பல பரிசுகளும் பதவிகளும் வழங்கிவந்தாலும், படைமுறையில் கடுமையில்லாததனுல் முகலாயசேனைகள் வெளிப்பகட்டில் மிகுந்தனவாயிருந்தனவேயன்றி உண்மையில் போர்வன்மை குன்றியேயிருந்



தலின், யாவரினும் சிறந்த வீரனுகக் கன்னனை வழக்கம்போல் புகழாமல்,

> என்னினும்பார் தனக்குரியன் சிலைத்தொழிலில்
> சிலைக்குருவா யெவரும் போற்றும்
> மன்னினுந்தான் மிகவலியன் தன்மடுத்தால்
> உந்தையினும் வலியன் சால

என்று துரோணனையே மறைமுகமாகப்புகழ்ந்தான். சிலையாசிரியனும், இவன் எண்ணியபடியே, மிகுந்த உற்சாகமுற்று, சிந்துவுக்கரசனைக் காப்பதாக வாக்களித்தபோது, சுயோதனன்கொண்டமகிழ்ச்சிசொற்கடங்காது. மற்றும்நாட்காலை சகடவியூகம்வகுத்து செம்பரிதியெனா அதனடுவில் சுயோதனனை நிறுத்தி, வியூகமுனையில் துரோணன் நின்றபோது இராசராசனுக்குற்ற கழிபேருவகை கூறும் தகைத்தோ? ஆனுல் சுயோதனன்முகம் விரைவில் விழுந்துவிட்டது. சற்றுநேரத்திற்கெல்லாம் துரோணன் கிரீடியுடன் போரிட்டு அவனை வியூகத்தில் விட்டான். இச்சமயத்தில் இராசராசன் செய்த தவறு மிகப்பெரியது. சிலையாசிரியன் விட்டாலும், இரண்டாவதுஅரணிலிருந்த கன்னன் விசயனை ஒடுக்கிவிடுவான் என்று நினைத்துச் சற்றேஇவன்மயங்கினின்றுன். இம்மயக்கந்தான் இவனது அழிவுக்குக் காரணம். மயக்கமென்பதே யில்லாமல், எந்திரமனைய வாழ்க்கையே வாழ்ந்த சுயோதனனிடத்துத் தோன்றிய இவ்வொரு மயக்கமே அவ்வெந்திரத்தைத் துகளாக்கியது. துரோணமுனிவன் விஜயனை உள்ளே விட்டவுடன், கன்னனுக்காகக்காத்திராமல் இராசராசன் அக்கணமே அம்முனிவனது காலில் விழுந்திருப்பானுயின் அம்முனிவனும் ஏதேனுமொன்றுமுயன்றிருப்பான். ஆனுல் சுயோதனனே முதலில் அவ்வாறுசெய்யாமல், கன்னன் அடியுண்ட பின்னரே ஓடோடியும் சென்று அம்முனிவனிடம் முறையிட, அம்முனிவனும் சிறிது ஓர்ந்து பிளப்பதற்கரிய தன்னெடுங் கவசத்தை ஈந்தான். போருணர்ச்சிகளைத் தனது தத்துவத்தினுல் அடக்கி ஆண்டு,† போர்புரிந்துவந்த உபநிடதமுனிவன், மிகுந்த போருணர்ச்சியுடனிருந்தபோது துரியோதனன் அவனை அருகிலிருந்து உற்சாகப்படுத்தி, நெருக்கடியான அச்சமயத்தில் அவனது வீர வாழ்க்கையில் ஒரு பெரு நெடும்போரியற்றும்படி செய்திருப்பானுயின், கிரீடியுமன்று தனது முதல்தோல்வியைக் கண்டிருப்பான். மற்று, அந்நாள் முழுவதும் சுயோதனன் துரோணனருகுநில்லாமல் கன்னன்பக்கலிலேஇருந்து வெற்றியை எதிர்பார்த்துநின்றுன்? அவன் அவ்வாறு மயங்கியதற்கு யாது காரணம்? போர்க்கலக்கமோ வென்னின் அன்று — பின் என்?

† துரோணனது கொள்கைகளைப்பற்றிச் சென்ற ஆண்டு உபநிடத முனிவன் என்னும்கட்டுரையில் விளங்கக் கூறினேன். இங்கு ஒருமுறை அக்கருத்துக்களை நினைவுக்குக் கொண்டுவரலாம்.

# சூரியன்

## II. பகலவன் உருவம்

### (வடிவமும் அமைப்பும்)

[89-வது பக்கத் தொடர்ச்சி]

மூன்று பிரிவுகள்:—நாம், சூரியனுடைய பிழம்பைத் தூரதிருஷ்டிக் கண்ணுடி வழியே கண்ணுறுவோமாயின், அஃது உலகத்தைப்போல உருண்டை வடிவமாக விளங்குவதோடு, பூமியைப்போல, மூன்று பகுதிகளாகப்பிரிந்துதோன்றக்காண்போம். நம்முடைய உலகத்திற்போல் சூரியனிலும் முனையிடமான துருவ எல்லைகள் (Polar regions) உள்ளன. நடுவிடமாகிய நாடி மண்டல எல்லையும்(Equatorial regions)உண்டு. இவ்விரண்டிற்குமிடையே இடை எல்லைகளும் உள்ளன. துருவப்பிரதேசங்களில், சூரியனுடைய சுடர்க்கொழுந்துகளைப் பெரும்பான்மையும் நாம் காண்பதில்லை; நாடிமண்டல எல்லையிலேயே, இவை பற்பல வகையாகச் செறிந்து கிடக்கின்றன.

சூரியப் புள்ளிகள் (Sun spots):—ஒரு வெள்ளைத் துணியைவிரித்து அதிலே மையை வாரித்தெறிப்போமானுல், அத்துணி எங்ஙனம் தோன்றுமோ அங்ஙனமே, இந்த நாடிமண்டலமும் சிலவிடங்களில்கறுத்தும் சில விடங்களிலே வெளுத்தும் தூர திருஷ்டிக் கண்ணுடி வழியே தோன்றுகிறது. இந்தக் கரும்புள்ளிகளைச் சூரியப் புள்ளிகள் (Sun spots) என வழங்கி வருகின்றனர். ஆயினும், இவை, கணிதசாஸ்திரிகள் கூறும் புள்ளிகள்போல அகல நீளம் அற்றவையல்ல. சூரியனுடைய தரைமட்டத்திலே அடிக்கடித் திடீர் என்று தோன்றும் இப்புள்ளிகளைப் பெரிய குழிகள் என்றே கூறலாம். நமது நிலவுலகில் தோன்றும் எரிமலைகளுக்கு இவற்றை ஒருவாறு ஒப்பிடலாம். இவற்றினுள்ளே நமது பூமியை எடுத்து எறிவோமாயின், ஒரு எரிமலையினுடைய வாயின் வழியே ஒரு பந்து விழுந்து மறைவது போல மறையும். முருகப் பெருமான் அண்டங்களைக்கொண்டு பந்தாடியபோது, நம் உலகமும் இவ்வாறு இந்தக் கரும்புள்ளியினுள்ளே நுழைந்துபோய் வந்திருத்தல் கூடும். தூரதிருஷ்டிக் கண்ணுடியால் சூரியனுடைய உருவத்தை ஒரு வெள்ளைச்சுவரிலே வீழ்த்திக் காண்போமானுல், இப் புள்ளிகளும் சுவரிலே விழக் காண்போம். இவற்றிற் சில பட்டாணி அளவாகவும், வேறு சில அரைக்கால் ரூபாய் அளவாகவும் தோன்றும்.

இதைக் கண்டவர்கள்:—இந்தப்புள்ளிகளைச்சீனர் தம் ஊனக்கண்ணாலேயே இற்றைக்குச் சுமார் 2500 வருஷங்களுக்கு முன்னரே (கி. மு. 670-ல்) கண்டு வியந்தனர். நம் நாட்டவரும் அதனை அறிந்திருந்தனர் எனலாம். வெஞ்சுடர் மண்டிலத்தின்கண் துளைகள் தோன்றல் தீநிமித்தம் என்று கூறுகின்றுர் நச்சினார்க்கினியர். மோக்ஷம் செல்லுவோர், சூரியனில் உள்ள இல்லிவழியாகப் போவார்கள் என்று உபநிடதங்கள் கூறுகின்றன. திருமங்கை மன்னர்,

> காரார் புரவியேழ் பூண்ட தனியாழி
> தேரார் நிறைகதிரோன் மண்டலத்தைக் கீண்டுபுக்கு
> ஆரா அமுதம் அங்கெய்தி அதினின்றும்
> வாரா தொழிவதொன் றுண்டே, —சிறிய திருமடல்

என நகையாடுகின்றுர். அப்புழையை இல்லி என்றே பெரியதிருமடலில் பாடியுள்ளார்.

> மன்னுங் கடுங்கதிரோன் மண்டலத்தின் நன்னடுவுள்
> அன்னதோ ரில்லியி னூடுபோய் வீடென்னும்
> தொன்னெறிக்கண் சென்றாரைச் சொல்லுமின்கள்.

என்று பாடும்போது, நாடிமண்டலப் பகுதியிலே

இவ்வில்லியாம் சூரியப்புள்ளியுள்ளதெனக் குறிப்பாராய் "கன்னடுவுள்" என்று பாடுகின்றார். திருமந்திரம் பாடிய திருமூலர், அண்டாதித்தன் என்றும், பிண்டாதித்தன் என்றும், மனவாதித்தன் என்றும், ஞானாதித்தன் என்றும், சிவாதித்தன் என்றும், ஐந்து வேறு ஆதித்தரைக் கூறுகின்றார். ஆதலின், உபநிடதம் கூறுகிற ஆதித்தன் இவற்றில் எவ்வாதித்தனே, அறியோம். ஆனால் திருமங்கை மன்னன்பிரானதைபாட வேண்டி நம்முடைய ஆதித்தனையே சுட்டுகிறார் என்னலாம். அஃதெவ்வாறாயினும் இதனைத் தூரதிருஷ்டிக் கண்ணாடியின் உதவியால், இத்தாலியா தேசத்து வானசாஸ்திரியாகிய கலிலியோ(Galileo) என்பவரே கி. பி. 1610-ம் வருஷத்தில் முதன்முதலாகக் கண்டார். பின்னர் எல்லோரும் கண்டுவருகின்றனர்.

இவற்றின் வரலாறு:— இந்தச் சூரியப் புள்ளிகள் இரட்டை இரட்டையாகவே தோன்றிவருகின்றன. இவற்றின் தோற்றமும் திரிவும் முறைபிறழ்ந்தில்லாமல் ஒரு கணிதமுறையைத் தழுவியே நிற்கின்றன. இந்த இந்தக் காலத்தில் இன்ன இன்ன இடத்திலே இவை இவ்வாறு தோன்றும் என வானசாஸ்திரிகள் கணக்கெடுத்திருக்கின்றனர். இவை பதினோராண்டிற்கோர்முறை தோன்றுகின்றன என முடிவுகட்டியுள்ளார்கள். இப்புள்ளிகளின் உற்பத்தியைப்பற்றி இவர்கள் இன்னமும் ஒரு முடிவிற்கு வரவில்லை. பூமியின் உள்ளே சிற்சில இடங்களில் நெருப்புக் கொதித்துக் கொண்டிருப்பதால், பல பொருள்களுருகிவழிந்து பெருக்கெடுத்து ஓடும்போது, உள்ளே தங்க முடியாமல் வெளியே எரிமலைகளாய்ப் பொங்கிவழிகின்றன அன்றோ? அஃதேபோலச் சூரிய கருப்பத்தினுள்ளே கொதித்துக்கொண்டிருக்கும் நீர்ப்பொருளும்வாயுப் பொருள்களும் உள்ளே தங்கமாட்டாமல், வெளியே பொங்கி வழிகின்றனவாம். அத்தகைய எரிமலைகளே இச் சூரியப் புள்ளிகள் என்பர் ஒரு சாரார். மற்றுஞ் சிலர், சூரியனது வெளிப்புறத்தே உருகியிருக்கின்ற பொருள்கள் சூரியனுக்குள் ஊடுருவிப்பாயும் வாய்க்கால்களே இச்சூரியப்புள்ளிகள் என்பர். இவை இத்தகைய வாய்க்கால்களாகவோ, எரிமலைகளாகவோ இருக்குமேயானால், சூரியனது அங்கமுழுதும் இவற்றைக் காணல்கூடும். ஆனால், இவை நாடிமண்டலத்தில் மட்டுமன்றோ விளங்குகின்றன? இப்புள்ளிகளை நோக்குவோமானால், இவற்றின் உட்பாகம் கறுத்திருக்கக் காண்கிறோம். எனவே, உட்பாகம் வெளிப்பாகத்தைவிடக் குளிர்ந்திருக்கவேண்டும். உட்புறம் குளிர்ந்திருக்குமாயின் எரிமலை ஏன் பொங்கிவழியப் போகின்றது? எனவே, இவை எரிமலையல்ல என்பர் ஒரு சாரார். பூமியானது தன் ஆகருஷணசக்தி செல்கிற எல்லையிற் சிக்கும் பொருள்களைத் தன்முகமாக வலித்திழுப்பது போலச் சூரியனும் தனது ஆகருஷணசக்தி செல்கிற எல்லையில் சிக்கும் பொருள்களை வலித்திழுக்கிறான்; இந்த ஆகருஷணஎல்லைக்குள்ளே புகுந்த பொருள் மீண்டும் வெளிவருவதில்லை. நீர்ச்சுழியினுள் சிக்கிய ஒருவன், எவ்வாறு சுற்றிச் சுற்றி வந்து கடைசியாக அதனுள்ளேயே அழுந்திவிடுகின்றானே, அன்னவாறே ஆகருஷணஎல்லைக்குள் சிக்கிய வெளிப்பொருள்களும் சூரியனைச் சுற்றிச்சுற்றிச்சில காலம் ஓடியலைந்து பின்னர்ச் சூரியனுள்ளேயே விழுந்துவிடுகின்றன. இவ்வாறு விழுகின்ற வெளிப்பொருளானது சூரியனைத் தாக்கியதும், உஷ்ணமாக இளகியிருக்கின்ற சூரியனது மேற்புறத்தைத் துளைத்துக் கொண்டு உள்ளே ஊடுருவிச்செல்கின்றது. ஆயினும், உள்ளே இறுகிய வாயு செறிந்துகிடப்பதால் வெளிப்பொருளை உள்ளே விடாமல் வெளியேமோதுகிறது; வந்தவழியே தப்பி ஓடமுயல்கிறது, இவ்வெளிப்பொருளும். இந்தப்போராட்டத்தினில் கோணிச் சிறிது திரும்புகிறது. அதனால் வந்தவழியே வாராமல், உட்சென்றபக்கத்திற்கு இடையே மற்றொருதுளை செய்துகொண்டு வெளியேவந்துவிடுகிறது. இவ்வாறு கூறுவார் சிலர், இதனாலன்றோ உட்புகுந்துளையும் வெளிவருந் துளையுஞ் சேர்ந்து, இரட்டையிரட்டையாக இப்புள்ளிகள் விளங்குகின்றன என, எடுத்துக்காட்டுகின்றார். இவ்வாறு பலதிறப்பட்ட கொள்கைகளைப் பலரும் கூறிவருகிறார்களேயன்றி, எல்லோரும் ஒரு முடிவிற்கு இதுவரையிலும் வரவில்லை.

சூரியனுள்ளே இருவேறு சுழற்சி:—இப்புள்ளிகளை ஆராய்வதால் மற்றொரு விநோதமும்வெளியாகிறது. சூரியனுடையநிரக்ஷரேகைக்குக்(Equator)குறுக்காக அன்றி நேராகவே இப்புள்ளிகள் சுற்றிவருகின்றன. இப் புள்ளிகள் வெவ்வேறாக நின்று தனித் தனியே சுழன்றுவருவன அல்ல. இவற்றிற்கெனத் தனியியக்கம் இல்லை. அவ்வாறாயின் இவை சுற்றுவது, எங்ஙனம் நிகழ்கின்றது? சூரியன் பூமியைப்போலத் தன்னைத்தானே சுற்றிவருகையில்சூரியனுள்ளேவிளங்கும் இவையும் ஒன்றாய்ச் சுற்றுகின்றன. இவ்வாறு சுற்றிவருவதை உற்றுநோக்கினால் ஒருபுதுமையைக் காண்கிறோம். சூரியனுடைய நாடிமண்டலத்திலுள்ள ஒரு புள்ளி சுற்றிவர 25 நாள்கள்செல்லுகின்றன. துருவமண்டலத்திலுள்ளே குறித்த ஓரிடமோ சுற்றிவர 28 நாட்கள் செல்லுகின்றன. ஒருவன் தன்னைச் சுற்றி ஆத்மப்பிரதக்ஷிண நமஸ்காரம் செய்யும்போது அவனுடைய வயிறுமட்டும் முன்னே சுற்றிவிட அதன் பின் சிலநாள் சென்று அவனுடைய காலும் தலையும் அச்சுற்றை முடிப்பதுபோலும் புதுமையன்றோ ஈது எனின், சூரியன்முழுதும் ஒரேநிலையில் இறுகியுள்ள பொருள்களாலமைந்தவன் அல்லன் என்பது வெளியாகிறது. நாடிமண்டலப்பகுதி மிகநெகிழ்ந்து கிடப்பதால் அது சுற்றிவருதல் விரைந்து நிகழுகின்றது; துருவ எல்லை மிக இறுகிக்கிடப்பதால் அந்தப்பகுதி சுற்றிவர நாளாகின்றது.

சூரியப் புள்ளியும், செவ்வானச் சோதியும்:—இச்சூரியப்புள்ளிகளுக்கும், பூமியிலே துருவப்பிரதேசங்களிலே பேரிரவினில் தோன்றுகின்ற அச்செவ்வானஜோதிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டென வானசாஸ்திரிகள்கூறுகின்றனர். இப்புள்ளிகள் மிகமாய்த் தோன்றுகின்ற காலத்திலே இந்தச் செவ்வானத்து ஜோதி மிக்கவிளக்கமுறுகிறது; இவை குறைந்துவருகிற காலத்திலேஜோதியும் ஒளி மழுங்குகிறது. சில பொருள்களைமட்டும் தன்முகமாகஇழுக்குகின்ற சாதாரணகாந்தக்கல்லினும், எல்லாப் பொருள்களையும் தன்முகமாகவலிக்கும் நம் பூமி பேராற்றல் உடைய ஒருபெருங் காந்தப்பிழம்பாம். இதனுடைய காந்தச் சக்தி, துருவப் பிரதேசங்களிலே ஒருமுகப்பட்டுக் கிடக்கின்றது. சூரியன், உலகத்தின்மீது பூமாரி பொழிவதுபோல மின்னணுக்களை (Electron ejections). இடைவிடாமல் பொழிந்துகொண்டே இருக்கின்றான். இம்மின்னணுக்களுக்கும் காந்தச்சக்தியுண்டு.



ஆகையினால் இம் மின்னணுமழையில் காந்தச் சக்தி பூமிமேல் பாய்வது, பெரியதோர்காந்தக்கல் சுழன்று வீழ்வது போலவே விளங்குகிறது. சூரியனிலிருந்து பிறந்துபரவும் இந்தக் காந்தப்புயற்காற்று இவ்வாறு அடித்துக்கொண்டே இருந்தாலும், சிலசமயங்களில் இவை கொடூரமாக வீசுகின்றன. இக்காந்தக்கொடுங்காற்றினால் தந்திப்போக்குவரவுகள், பலமணி நேரங்கள்வரை அடியோடுநின்றுபோய்விடுகின்றன. இந்தக் காந்தப் புயற்காற்று மோதுகிறபோது, செவ்வானச் சோதி பேரொளியோடும் பிறங்குகின்றது. பூமியின் துருவப் பிரதேசத்தில் காந்தச்சக்தி ஒருமுகப்பட்டு இருப்பதால், சூரியன் பொழியும்இந்தக் காந்தமழையைத் துருவப்பிரதேசம் வலித் திழுக்கின்றது. அதனாலேதான், அப்பிரதேசங்களில் பேரிரவில்,செவ்வானச் சோதி சிற்சிலபோது மிக மிக விளக்கமுற்றுப் பேரழகோடும் பொலிகிறது.

---

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

7-ம் பத்து 3-ம் தசகம்.

[90-வது பக்கத் தொடர்ச்சி]

### 4-ம் பாசுரம்

இழந்தவெம் மாமை நிறத்துப் போனவென்
    னெஞ்சி னுரு மங்கே யொழிந்தார்
உழந்தினி யாரைக்கொண்டென் னுசாகோ
    வோதக் கடலொலி போல வெங்கு
மெழுந்தநல் வேதத் தொலிநின் றோங்கு
    தென்றிருப் பேரை யில்வீற் றிருந்த
முழங்குசங் கக்கையன் மாயத் தாழ்ந்தே
    னன்னை யர்கா ளென்னையென் முனிந்தே

விசேஷக் குறிப்பு:—மாமை - தேஹத்தின் காந்தி, முத்தில் இருப்பதுபோல் உள்ளிருந்து வெளியிலே தென்படும் ஒரு ஒளி (Bloom). இவ்வொளி விரஹவியஸநத்தால் மறைந்து போவதே மாமை-அதாவது நிறம்வேறுபடுதல் என்பார் கவிகள். "பசப்பு" விவர்ணம் என்பதும்இம்மாமையைத்தான். "சாயலும் நாணும்அவர் (நாயகன்) கொண்டார்" என்று "பசப்புறு பருவரல்" அதிகாரத்தில் திருவள்ளுவ நாயனார் தலைமகளின் கூற்றாக உரைப்பார்—பிருகிருதம் இப்பிராட்டிக்குப் "பசப்பு" மாத்திரம் தோன்றியிருப்பதனை அன்னைமார் கண்டு, தலைமகன் வேட்டைக்குப் புறப்பட்டுப்போனவுடனே தானேபசப்புற்று நாணமும் துறந்து படவேண்டுமோ, ஆற்றியிருக்க வேண்டாவோ ஊரவர் பழிக்கமாட்டார்களோ" வென்று பொடிந்து பேச, இப்பிராட்டி அதுகேட்டு, "என்னலாவதென்? என் மாமை அத்தலைமகனோடு கூடவே அவனை யாசைப்பட்டுப் போயிற்று. தன் நீர்மையாகிய "ஸத்தை" (உயிரன்ன வொளியை) விட்டு ஜீவிக்க உதவாதென்பது கருதி என் நெஞ்சு அதைத் தேடிப் போயிற்று. நெஞ்சும்தலைமகனிடத்தில் ஈடுபாட்டால் திரும்பவில்லை. நான் யாரைக்கொண்டு என் செய்க" என்கிறாள். தன்னெஞ்சை ஓர் பெண்ணாக உருவகப்படுத்திப் பேசுகிறபடி. இந்தஸமாதானம் ஒவ்வுமோ வென்றும், இது வெறும் சாதுரிய பேச்சா அல்லது உண்மையாவென்றும்ஆராயுங்கால், இதுஅது வென்னச் சொல்லத்துணிவது உசிதமன்றேனும் மற்றொரு தலைவியின் அநுபவத்தைக்கண்டு எழுதிய திருவள்ளுவர்நோக்கம்போல் அறிந்துகொள்ளவிடந்தருவோம். "பசப்புற்று நிரம்ப மெலிந்து போனாயே' யென்று ஒருதலைவியை வினவினதோழிக்கு அவள் "யான் தலைவரைத் தழுவிகிடந்த பண்டொருநாள் சிறிது விலகினேன்; அவ்வளவிலேஎனக்குப் பசப்புண்டாயிற்று" என்றாள்.

"புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தே னவ்வளவி
    ன் வந்தே பசப்பு"

எனின், அடியோடு பிரிந்திருக்கு மெனக்கு உறுப்பு நலனழிவது ஆச்சரியமோ." என்றுசொல்லவந்தபடி. இவ்வளவு மானபின்பு, உழந்துஇனியாரைக்கொண்டென்ன உசாகோ - இனி இந்தஸ்திதியில் வருத்தப்பட்டு யாருடைய ஸஹாயத்தை முன்னிட்டு என்னவென்று ஆப்தர்களோடு கலந்துயோசித்துத்தெரிந்து கொள்வேன்-அன்னைமாரே என்னைமுனிந்து என்ன காரியம்" என்கிறாள்.

---

### 5-ம் பாசுரம்

முனிந்து சகட முதைத்து மாயப்
    பேய்முலை யுண்டு மருதி டைபோய்க்
கனிந்த விளவுக்குக் கன்றெ றிந்த
    கண்ணபி ரானுக்கென் பெண்மை தோற்றேன்
முனிந்தினி யென்செய்தீ ரன்னை மீர்காள்
    முன்னி யவன்வந்து வீற்றி ருந்த
கனிந்த பொழிற்றிருப் பேரை யிற்கே
    காலம் பெற வென்னைக் காட்டுமினே

கருத்து:—கண்ணபிரானுடைய திவ்விய சேஷ்டிதங்களி லீடுபட்டு என் பெண்மையைத் தோற்றுவிட்டேன் - அன்னைமார்களே! என்னைக் கோபிப்பதில் என்ன ஆவது;திருப்பேரையில் அவன் என்னைஎதிர்பார்த்திருக்கின்றான். அவ்விடம் என்னைக் கூட்டிச் சென்று அவன்பக்கலிலேவிடுங்கோள். இதுவே செய்வது யுக்தம்" என்கிறாள்.

---

### 6-ம் பாசுரம்.

காலம்பெற வென்னைக் காட்டு மின்கள்
    காதல் கடலின் மிகப் பெரிதால்
நீலமுகில் வண்ணத்தெம் பெருமா னிற்கு
    முன்னே வந்தென் கைக்கு மெய்தான்
ஞாலத்தவன் வந்து வீற்றி ருந்த
    நான்மறை யாளரும் வேள்வி யோவாக்
கோலச் செந்நெற்கள் கவரி வீசுங்
    கூடு புனற்றிருப் பேரை யிற்கே.

உரை:— வேட்டைக் கெழுந்தருளிய வெம்பெருமான் மீண்டுவரக் காலமாயிற்று, சற்றுநேர மாற்றியிரு - திருப்பேரைக்கு நாங்கள் உன்னைக் கூட்டிச் செல்ல அவசியமில்லை' என்று அன்னைமார் சொல்ல, இந்தப்பிராட்டி "நீங்கள் சொல்லும்வண்ணம் ஒரு க்ஷணம் கூட ஆற்றியிருக்க இயலாது. எனது காதல் கடலிலும் பெரிதாக என்னைத் தாக்கி, அங்கே ஏகத் தூண்டுகின்றது. எம்பெருமானே நீலமேகம் போல் கண்களுக் கினியனாய் எனக்குத் தோற்றுகின்றான். அவன்பால்சென்று அடையவேண்டும்." என்ன, அன்

ணமார்கள்-"நீ அவனைக் காணவேண்டுமென்றன்றோ வேண்டிக்கொண்டது! அதுவோ உன்னிஷ்டப்படி நேர்ந்திருக்கின்றதே" என்ன, இப்பிராட்டி "கண்கள் முன் வந்து என்ன பயன்?" "கைக்கும் எய்தான்" - மெய்தொட்டுக் கலவைசெய்து மகிழவும் உரையாடி உவக்கவும் அவனே உரித்தாகவில்லையே, நான் கைகூப்புவதை அங்கீகரிக்கக் கூட அவன் உதவவில்லையே, ஆகையால் நான் திருப்பேரைக்குப் போகாமல் எங்ஙனம் மீள்வது" என்கின்றாள். பின்னே என்னதான் செய்யவேண்டுமென்று தாய்மார் கேட்க, பிராட்டி உரைக்கிறாள் - "ஒருக்கணம் கூட இங்கு இருக்க இயலாது. அவனே, திருப்பேரையில் யக்ஞங்கள் ஸதாஸர்வகாலமும் நடந்துவருவதால் அந்த யாகங்களில் நடக்கும் வேதகோஷ ஸ்துதியினாலும் உபசாரத்தாலும், செந்நெற் கதிர்கள் வயல்களில் நன்றாக வளர்ந்து காற்றிலசைந்து கவரிவீசும் சாமரசைத்திய வுபசாரத்தாலும் ஈடுபட்டு வீறுதோன்ற வீற்றிருக்கின்றான். அங்கே அவன் சந்நிதிக்குக் காலம் பெற - அதாவது ஒருக்கணமும் தாமஸியாமல் - யான் செல்லவேண்டும்" என்கிறாள்.

குறிப்பு:—சுவாபதேசத்தில்- திருப்பேரைக்கு ஆழ்வார் திருவுள்ளப்படி சென்றாலும் அங்குக் கோவில் கொண்டிருக்கு மெம்பெருமான் அர்ச்சாவதார மூர்த்தியாகையால் இப்பிராட்டி இப்பாசுரத்தில் முறையிடுகின்ற "கைக்கும் எய்தான்" என்கிற குறைதீர்ந்து அவனது மனோரதம் நிறைவேறப்போகிறதில்லையே, ஏன் வீண் பிரலாபமென்று ஆக்ஷேபிக்கவொண்ணுமோ? நறும் பூக்களைக் கசக்கி முகருவாருண்டோ? இவ்வாழ்வாரின் நோக்கம், சுதர்சன ஆழ்வார்போல் பகவானுக்கு ஸதாஸார்வகாலம்தொண்டுகள்செய்து ஆழ்ந்து உகக்கவேணுமென்பதல்லவோ? இத்தசகத்தின் பலசுருதிபாசுரத்தில் இதனையே வற்புறுத்துவதறியத்தக்கது.

---

### 7-ம் பாசுரம்.

பேரெயிற் சூழ்கடற் றென்னி லங்கை
 செற்றபி ரான்வந்து வீற்றி ருந்த
பேரையிற்கே புக்கென் னெஞ்ச நாடிப்
 பேர்த்துவர வெங்குங் காண மாட்டேன்
ஆரையி னியிங் குடையந் தோழீ
 என்னெஞ்சங் கூவ வல்லாரு மில்லை
யாரையினிக் கொண்டென் சாதிக் கின்ற
 தென்னெஞ்சங் கண்ட துவேகண் டேனே.

பதக்குறிப்புக்கள்:—பேர்-பெரிதான, எயில்-மதில். ஸ்ரீராமபிரான் இலங்கையை ஜயித்துத்திரும்பிவந்து வீறுதோன்றச் சிம்மாஸனத்தில் வீற்றிருப்பதாகத் திருவுள்ளம். பகவானோடு யாத்திரை சென்றிருந்த என்நெஞ்சு - (நெஞ்சினொன்று உருவகப்படுத்திச் சற்றுமுன் விளித்ததை ஞாபகப்படுத்திக்கொள்க) - வருவதை எங்கும் காணமாட்டேன்-அவன்வராததினால் நான் அவனைக் காணக்கூடவில்லை என்கின்றாள். ஆரை இங்கு உடையோம்தோழி-தோழியையும்உளப்படுத்தி முறையிடுவது, இப்பிராட்டியின் மனம்போலிணங்கிப் பேசவில்லையே யென்று தோழியின்மேல் கொடுமைபாராட்டுகிறபடி— என்நெஞ்சைப் போய் அழைக்கச் சக்தியுள்ளவர்களிங்கில்லை- இனி உதவியொருவரும் இல்லாத யான் எதைத்தான் சாதிக்கக்கூடும்; ஒன்றும் இல்லாத இந்நிலையில் மனம்போன போக்கே யானும் செல்லவேண்டும்" என்கிறாள்.

---

### 8-ம் பாசுரம்

கண்டதுவே கொண்டெல் லாருங் கூடிக்
 கார்க்கடல் வண்ண னோடென் றிறத்துக்
கொண்ட லர் தூற் றிற்றது முதலாக்
 கொண்ட வென்காத லுரைக்கிற் றோழீ
மண்டிணி ஞால முமேழ் கடலும்
 நீள்வி சும்புங் கழியப் பெரிதால்
தெண்டிரை சூழ்ந்தவன் வீற்றி ருந்த
 தென் றிருப் பேரையில் சேர்வன் சென்றே.

குறிப்புக்கள்:—கார்க்கடல்வண்ணன் என் திறத்துக் கொண்டு அலர் தூற்றிற்று அதுமுதலாக - நீலமேகவர்ணமுள்ள எம்பெருமானுக்கு என்பக்கல் உண்டான விசேஷ அன்பைத் தோழிமாரும் அன்னைமாருமாகிய நீங்கள் பேசுவதையே காரணமாகக்கொண்டு என்பேரில் ஊரவர் பழியேற்றி ஏசுகிறதினாலே அதிமாத்திரமாய் ஓங்கி என் ஆசை வளர்ந்துபோயிற்று. நீங்களே என்நிலைமைக்குக் காரணமாவீர்கள்; ஆனால் அக்காதல்தான் அவ்வளவுக்கில்லையோ எனில், "உண்மையை உரைப்பதாயிருந்தால் சர்வ வண்டங்களும் கடல்களும் அளவிறந்த அத்திருநாடுங்கூட நிறையப்பெற்று இவைகளும் இடம்பெறாமையினால் பெருகி வழிகின்றன. ஆகையால் திருப்பேரைக்கு நானேயாகிலும் சென்று எம்பெருமானோடு கலப்பேன்" என்கின்றாள்.

---

### 9-ம் பாசுரம்

சேர்வன்சென் றென்னுடைத் தோழி மீர்காள்
 அன்னையர்கா ளென்னைத் தேற்ற வேண்டா
நீங்க ளுரைக்கின்ற தென்னி தற்கென்
 னெஞ்சு நிறைவு மெனக்கிங் கில்லை
கார்வண்ணன் கார்க்கடல் ஞால முண்ட
 கண்ணபிரான் வந்து வீற்றி ருந்த
ஏர்வள வொண் கழனிப் பழனத்தென்
 றிருப்பே ரையின் மா நகரே.

பொருள்:—"எம்பெருமான் தாம் சென்ற வேட்டையினின்றும் மீண்டுவர நேரமாயிற்று, திருப்பேரைக்கு நீபோக ஈடல்ல" என்று தோழிமாரும் அன்னையர்களும் ஆற்றியிருத்தல் நிமித்தம் சிற்சில சொற்களைச் சொல்லி யென்னைத் தேற்றுவிக்கவேண்டாம். இதுகிடக்க வேறு என்னதான் சொல்லுகிறீர்கள். "நீங்கள் உரைக்கின்றதென்ன" என்று வினவுவது "யான் திருப்பேரைக்குச் செல்வதற்கு என்ன ஆக்ஷேபம் எடுத்துரைக்கிறீர்கள்" என்று கேள்வி. a sort of can you show cause why I should not go? நீ செய்ய யத்தநிப்பது பெண்கள் நிறைவுக்கும் அடக்கத்திற்கும் மரியாதைக்கும் பொருந்தாது என்பதன்றோ நீங்கள் சொல்லப்போவது:– என் நெஞ்சு எனக்குச்சுவாதீனமல்ல, நாணமும்எனக்கில்லை. கண்ணபிரானவைகளை அபஹரித்துச்சென்றுவிட்டான் என்கலவைக்கென்றே அவன் இனிது வீற்றிருக்கும் திருப்பேரை மாநகருக்கே ஒருத்தியாகவே சென்று சேர்வேன். வழியில் ஆற்றியிருக்க மாட்டுவேனோ? ஆகையால் எம்பெருமானைக் காணவேணு மென்ற ஆசை முடுக்குவதினால் துணையில்லையாகிலும் தனியே நெடுவழி போகத் துணிவேன்" என்கிறாள்.



# சூளாமணி

### 4. இரதநூபுரச் சருக்கம்

[84-வது பக்கத் தொடர்ச்சி]

80 உபதேசம்: "செய்யுற நிழற்றும் வேலோய்; மருளாறும்மாணுப்பிறப்பு. எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு. உள்ளதை உள்ளவாறு அறியும் மெய்யறிவு (சத்ய ஞானம்) இல்லாமையாலன்றோ காம வெகுளி மயக்கம் என்பன தோன்றி நம்மை உலகத்தே ஆட்டிவைத்து நம் தலையில் தூக்கமுடியாத பெருஞ்சுமையாம் இருவினைகளை ஏற்றிக் கீழே அழுத்துகின்றன. உலக வாழ்வாம் மரத்திற்கு மெய்யறிவிலாமையே வித்து; அவ்வித்திலிருந்தும் கொடியனவாய், நம்மைச் செயலற்றுத் திகைக்கச்செய்யும் வினைகள், கவடு விட்டுக் கிளைகளாய்ப் பரந்து வளர்கின்றன. இரு வினையாம் கிளைகளிலே இம்மரம் கொடுந் துயர்எனும் பழத்தை விளைவிக்கின்றது. இம்மரத்தின் இப்பழத்தை இனிதெனக் கொண்டு மருண்டு மயங்கி உண்டு வருந்தி வாடுகின்ற உயிர்கள், உடனே இறந்தொழியாது உயிரோடு துடிதுடிப்பதை என் என்பது. இதனாலே இவர்கள் பிறவிகள் தொடர்ந்து மாலையாக வருகின்றனவன்றோ? துன்பவினையாற் பிறவி, பிறவியால் வினை எனத் தொடர்ந்துபோதலின், இப்பிறவியின் எண்ணிக்கையை மனத்தால்தான் எண்ணப்போமா? அப்பிறவியின் இயல்பைத்தான் எண்ணப்போமா?

81. "உயிர்களைச்சூழ்கின்றன வினைகள். அவையே அவர்களை மற்றொரு பிறப்பில் தூரத்துகின்றன. பிறந்தபோது உடனே வரும் பண்டைய வினையை இப்பிறவியில் துய்க்கவேண்டுமன்றோ. வினைப்பயனைத் துய்க்கும்போது, இன்னமும் கீழே கொண்டுசென்று அவர்களை வீழ்த்தும் வினையை மறுமைக்காக வேறும் செய்கின்றார்கள். இந்தத் துன்பவாழ்க்கையில் சாதலின் இன்னாத தில்லையன்றோ. பெருந்துன்பத்தோடும் உலகைவிட்டுப் பிரிந்திறக்கிறார். ஆனால் ஈதோ முடிவு. மறுமுறையும் தோன்றி, வினைப்பயனைத் துய்க்கின்றனர்; ஆய்துயர் உழக்கின்றன. ஐயோ! அருளற்ற அறிவற்ற இம்மாக்கள் இத்தாழ்வை விலக்கும் நற்சார்வு பெறாதவரை இவ்வாறு சுழல்கின்றனர் அன்றோ! சார் புணர்ந்து சார்புகெட ஒழுகினன்றோ சார்தரா சார்தரும் நோய்.

82. "இன்பப் பயிர் விளையாதபடி நெருக்கிக்கெடுப்பன நான்குவகை களைகள் ஆகும். நல்லறிவை மறைப்பன (ஞானா வரணீயம்), நற்காட்சியை மறைப்பன (தர்சனா வரணீயம்), இடையிட்டுத் தடுப்பன (அந்தராயம்) மயக்க மூட்டுவன (மோக நீயம்) என்ற இந்த நான்குவகையான களைகளாங் காதி வினைகளைப் பிடுங்கி எறிதற்கு ஒரு வழியுண்டு. அஃதே அழகிய அறநெறி; அதைக்காட்டும் கண்ணே அருகப்பெருமான்: இப்பெரியான் மெய்யறிஞர் உள்ளத்தே ஓவறவிமைக்குமவிரொளியாய் விளங்குகின்றான். அவனைக் கண்டு, அவர்கள் ஏத்தி நிற்கின்றனர். இவனும் முதலும் முடிவுமின்றி எங்குமாய் அகன்று, எவற்றையும் உணர்ந்து நிற்கின்றான். அவனுடைய திருவடிகள் அன்றோ, பெருந்துயரை விளைக்கும் துன்பவினைகளை ஒழிப்பதற்கு நமக்குப் புகலிடமாவன. பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்று பற்றிவிடற்கு.

83. "அவனே அந்நெறி காணும் கண். அக்கண் காட்டுவதுதான் யாது. இவ்விறைவனால் விரிக்கப்பட்டவை யாவை? மெய்ப்பொருள் தெரிதலே நல்லறிவு; ஈது என்று எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு. பொருள் நின்ற பெற்றியைப் பொய்யின்றுணர்தல் மருளறு நன்ஞான மாண்பு. அவ்வாறு விளங்கிய பொருள்கள் தம்மைப் பொய்வகையின்றித் தேறல் நற்காட்சியாகும். ஈதே ஓர்த்துள்ள துணர்தலாம். ஐயமின்மை, அவாவின்மை, உவர்ப்பின்மை, மயக்கமின்மை, அறப்பழி நீக்கல், அழிந்தாரைத் தாங்கல், அறத்திற்களவளாவுதல், அறத்தை விளக்குதல் என்று எட்டுறுப்பிற்றாகி, அப்பொருள்மிசை விரிந்த ஞானம் இரண்டாவதாகும். விள்வற இருமையும் விளங்கத் தன்னுளே ஒள்ளிதிற் றரித்து, ஐம்பொறியும் வாட்டி உய்வகை யுயிரைத் தேயாதொழுகுதல் நல்லொழுக்கமாகும். அப்பொருள் வழாத நூலின் அருந்தகை ஒழுக்கம் மூன்றாவதாகும். இம்மூன்றுமே இறைவன் அருளிய முத்திருமணிகள். கனபொற்றாரோய், இவற்றையே கைப்பொருளாகக் கொண்டு, உறுதியாகக் கைப்பற்றி ஒழுகுவாயாக." இம் மறைமொழியைக் கூறத் தொடங்கியபோது நெய்யுற நிழற்றும் வேல் தோன்றிற்று; இம் மறைமொழியின் முடிவில் கனபொற்றாரே தோன்றுகிறது. எரிசினம் உள்ளும் மாற இன்பம் துளிர்க்கின்றபடி இது.

84. சாரணர்பெருமான், இவ்வாறு நாம் இப்போது சிக்கிக்கிடக்கும் இடும்பைக் கிடும்பையியல் வாழ்க்கையைப்புனைந்துஉரைக்கலானார். இவ்விடும்பையின் வேரையும்ஆராய்ந்துரைத்தனர்; இந்நோய்தீரும்மருந்தும் கூறினார். இம்மருந்து உண்டார் பெறும்பயனாமின்பத்தைப் பின்னே கூறுகின்றார் சாரணர் பெருமான். "நம் உடலை வந்து பற்றிக்கொண்டு உள்ளிருந்தே நம்மைக்கொல்லும் நோய்களையும், முதுமையையும், முன்வினைப்பயனால்வருந் துன்பங்களையும் இம்மும்மணிச்செல்வர் நீக்கிவிடுகின்றனர். தீங்கெலாம் ஒழியவே உடலும் தூயதாகி ஒளிர்கின்றனர். இக்கடவுள்வடிவம் தாங்கி நிற்கையில் உலகம் முழுதும் இவர்களைச் சுற்றிநின்று ஏத்துகின்றது. இவர்கள் பெற்ற இன்பம் எல்லையிலாதது; பிறழ்விலாது நிலைத்து நிற்பதாகும். மன்னா! ஈதே அம்மும்மணிச் செல்வர் பெறும்பேறு. நீயும்பெற்று மன்னுவாயாக."

85. பொறுத்தற்கும்நீக்குதற்கும்அரிய துன்பத்தை அறவே வெட்டி எறியும் மாட்சிமையோடு வரம்பில் இன்பமாம் அமுதெனக் களிப்பூட்டும் இம்முப்பொருள் உண்மையை இவ்வாறு திருத்தமாகச் சாரணர் பெருமான் விளக்கிப் பேருரை நிகழ்த்தியபோது, அரசனுடன் வந்த மக்களும் கேட்டிருந்தனர் அன்றோ? அவர்களிடத்தும் தீவினை யிருள்கள் போழும் விரிந்த நல்லறிவின் சோதி விளங்கத் தொடங்குகின்றது. அகமகிழ்ந்து, மிகத்தெளிவுபெற்றோராய், பிறவி தானே ஒழிந்துபோக அறிவுபெற்று நிற்பாரைப்போல விளங்குகின்றார்கள். நல்லறிவு எனும் திருமணி இவ்வாறு ஒளிர்கின்றது.

86. அறவழியில்நிலைபெற்றுள்ள அம்முனிவர்பெருமானது திருவாயின்நின்றும் மணி கொழித்தாற்

போல் வந்த திருமொழிகளைக் கேட்டான் அரசன். அச் சாரணர்பெருமான் கூறிவந்த பிறவிகளை ஒழிக்கும் மொழிகளல்லவா அவை! அவர்புனைந்துரைத்த இன்பப்பயனை எதிரே கைமேல் கொண்டுவரும்மொழிகள் அல்லவா! கன்னவில் கடகத்தோளான் அவ்வுரைகளைக்கேட்டு நற்காட்சிபெற்று, அதன்பயனாகத் திருமேனி தூயதாக ஒளிர்கின்றான். நற்காட்சி என்னும் திருமணி இவ்வாறுமிளிர்கின்றது. அவனுடைமனைவியர் பெருநோன்பு நோற்கும் நல்லொழுக்கநிலை பெறுகின்றனர். நல்லொழுக்கம் என்னும் திருமணி இவ்வாறு திகழ்கின்றது.

87.மன்னவனார் இளமகளும்,இப்பெரியாரது இன்னுரையாம் அமுதம்உண்டெழுகிறாள்;. திருமேனிப் பொலிவும் அறிவின் பொலிவும் பெற்றொளிர்கின்றாள்; சாரணர்பெருமானை வணங்குகின்றாள். இவர் கூறிய நோன்புகளை ஆராய்ந்து, அவற்றில் ஒன்றைச் செய்வான் மேற்கொள்கிறாள். பின்னே அதனைச் சிறப்பாகச்செய்துமுடிக்கும் உயர்ந்தொரு கருத்தைக் கொள்கிறாள்.

88. முனிவர் பெருமக்களின் திருவடியை வணங்குகின்றான் மூசுதேன் பனிமலர் விரவிய படலை மார்பினான்; களிவளர் பொழிலினிடையேவிளங்கும் அருகக் கடவுளின் திருக்கோயிலினை இனிதே வலம்வருகின்றான். பின் தன் நகரத்திற்குப் போகின்றான். நற்காட்சி பெற்றான் இன்பவடிவாக விளங்குதலை "மூசுதேன் பனிமலர் விரவிய படலை மார்பினான்" என விளக்குதல் காண்க. இன்பவடிவமாக இயற்கையும் ஒளிர அதனிடையே இறைவனைக் காணுதல்போலத் திருக்கோயிலை வழிபடுதலும் காண்க.

89. அழகிய இடையணியால்ஒளிரும் தன்னுடைய காதலிமார் மனத்தேகாமவேள் இடங்கொள்ளுமாறு நீள்பொழிலில் விளையாடியருளிய அவ்வரசன், அவர்கள்கண்ணைப்போலஒளிரும் வேலைத்தாங்கிய இளம்பெண்கள் மெய்காப்பாளர்களாய் வர நகரம்போய்ச் சேர்கின்றான். மும்மணிச் செல்வர் இல்லறம் நடத்தும்வகை இது.

90. அரசன் பிறஅரசர்கள் தன்னைச்சூழ நகர்க்குள் போய்ச் சேர்கின்றான். சகநந்தனர் அபிநந்தனர் என்னுஞ்சாரணர்கள், அருகனை மிகவும்போற்றிவணங்குகின்றனர். வானத்தேபோகின்றனர். இவர்களின் ஒளி எங்கும் பரவுகின்றது. இவ்வொளி, கதிரவன் ஒளியையும் சிரித்திகழ்கின்றது. அங்ஙனம்சிறந்தகடவுள் ஒளியாகும் ஈது.

## பாரதியார் வேதாந்தப் பாடல்.

உலகத்தில் மிகப் பிரபலமாக வழங்கும் நான்கு மதங்களில், இந்துமதமும் பௌத்தமதமும், நமது தாய்நாட்டில், பிறமதங்கள் தோன்றுவதற்குப் பன்னாட்களுக்குமுன் தோன்றின. தற்பொழுதும் நமது தாய்நாட்டில் பௌத்தமதம் இல்லையென்று கொள்வதற்கில்லை. எனினும்அம்மதம் தோன்றுதற்குரியகாரணங்களையும், அதன் சாரமான கொள்கைகளையும் நன்கு தெளிந்தவர்கள், அம்மதம் இந்நாட்டில் செய்யக் கருதிய வேலையை நன்கு முடித்து இந்துமதத்தோடு ஒன்றுபட்டு மறைந்தது என்றே கொள்வர்

மதசம்பந்தமான தத்துவஆராய்ச்சியில் நம் நாட்டினர் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே ஈடுபட்டனர். எனினும் சென்ற இரண்டு நூற்றாண்டுகளாக இத்துறையிலிறங்கி, மேல்நாட்டில் மேலும் மேலும் ஆராய்வதுபோன்ற மக்கள் தற்பொழுது நம் நாட்டில் மிகக்குறைவு என்பதை யாரு மறுக்கமுடியாது. நமது நாட்டில் பலர், பழக்கவழக்கங்களிலும், மதக்கொள்கைகளிலுமுள்ள உண்மைத் தத்துவங்களை அறியாமலும், அறிய முயலாமலும், எல்லாவற்றிலும் மூட நம்பிக்கைவைத்து, மனிதவாழ்க்கையில் நின்றந்த, நோய் மூப்பு பிறப்பு இறப்பு முதலியவற்றாலுண்டாகும் துன்பத்தைச் சரித்திரங்களாலும் பாடல்களாலும் கேட்டு, வாழ்க்கையின் அநித்தியத்திற்குப் பெரிதும் அஞ்சி வாழ்க்கையையே வெறுக்க ஆரம்பித்தனர். இதனால் பாமரஜனங்களுக்கும் கூட லௌகீகவாழ்க்கையில் ஊக்கங் குன்றஆரம்பித்தது.

வேதாந்த நூல்களை ஆராய்ந்த சிலர், தாம் கண்டு தெளிந்த பொருள்களைப் பிறர் எளிதில்அறிய இயலாதநடையில், வேதத்தையும் ஸ்ம்ருதிவாக்கியங்களையுமுற்றும் தழுவி அவைகளை இடையேமடுத்து எழுதிவைத்திருக்கிறகாரணத்தால் அப்பொருளைப்பெரும்பாலோர் நம் நாட்டில் அறிந்து பயன் எய்தாதுபோயினர். பெரியோர்கள் பலர் எளிய நடையில் எடுத்துரைக்காததால் வேதாந்த சாஸ்திரமே மிகக்கடினமானதென்று நம்நாட்டில் பலரால் எண்ணப்படுகிறது. அன்றியும், வேதாந்த சாஸ்திரம் வாழ்க்கையில் வெறுப்பையுண்டாக்கி, உலகவாழ்க்கையின் ஊக்கத்தைக்கெடுக்கும் என்ற எண்ணங்கொண்டு இளைஞர்கள் அதைப் படிக்கலாகாது எனவும் பலர்கூறுகின்றனர்.

பாரதியாரின் வேதாந்தப்பாடல்களைப்படிப்போர், வேதாந்தம்மிகக்கடினமென்றாவது, அந்நூல் உலகத்தில் வெறுப்பையுண்டாக்கி வாழ்க்கையின் ஊக்கத்தைக் குன்றச்செய்யுமென்றாவது அஞ்சவேண்டியதேயில்லை. எல்லோருக்கும் நெருங்கிய சம்பந்தமுள்ளதும், எளிதில் விளங்கக் கூடியதும், இன்றியமையாததுமான நூல் வேதாந்தமே என்றகொள்கையை நம்மவர்க்கெடுத்துக்காட்டிய இக்கவிஞர்பெருமான் பாடிய வேதாந்தப்பாடல்கள் தமிழுலகத்தி லுள்ள மற்றவெல்லா நூல்களையுவிட அதிகமான ஊக்கத்தையும் உற்சாகத்தையும் நம் வாழ்க்கைக்கு அளிக்கின்றன என்பதை என் அனுபவத்தில் கண்டேன்.

மனமென்னும் நிலத்தில் வித்தூன்றி நாள் தவறாமல் கவலையைப் பயிராக்கும் உழவர்களாகிய நாமே கவலைக்கு மிகவும் அஞ்சி உயிர் வாழ்கின்றோம்; இதனினும் அறியாமை உலகத்தில் வேறு யாது மில்லையென்ற கொள்கையை விளக்கும்

"நெஞ்சிற் கவலை நிதமும் பயிராக்கி
யஞ்சியுயிர் வாழ்தல் அறியாமை"

என்ற இணையற்ற அடிகள், உண்மைஉணர்வும் உள்ளத்திற்கு ஒளியும் ஆறுதலும் தெளிவும் உண்டாக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. தாயுமானார் இராமலிங்க சுவாமிகள், பட்டினத்தடிகள் முதலியவர்களின் வேதாந்தப்பாடல்கள், மிக்க உருக்கமான நடையையுடையனவாயினும், அவைகளைப்படிப்போருக்கு இவ்வுலகவாழ்க்கையில் வெறுப்பும் அச்சமுமுண்டாக்கி அதனால் மனத்தில் கவலையும் உண்டாக்



குகின்றன என்பதை என் அநுபவத்தில் கண்டேன். லௌகீகத்துறையில் தமிழ்மக்கள் பின்னடைந்திருப்பதற்குப் பல காரணங்களிருப்பினும் அவற்றுள் இத்தகைய பாடல்கள்நிறைந்த இலக்கியப் பகுதியும் ஒன்றாகும் என்று கூறின் மிகையாகாது.

"பருத்ததொந்திநம்மதென்று நாமிருக்க நாய்நரிகள்
பேய்கழுகு தம்மதென்று தாமிருக்குந் தான்"

என்ற அடிகளை ஈடுபட்டுப்படித்தவர்கள் மண்ணுலக வாழ்க்கையை எப்படி விரும்புவார்கள்? இதைப்படிப்போர் நெஞ்சில் பின்னே ஊக்கத்திற்கும் முயற்சிக்கும் இடனேது?

பயமே உருவாக வெடுத்த பதடிகளின் நெஞ்சில் தோன்றும் கலக்கமும் அச்சமும், அனலிற்பட்ட பஞ்சுபோல் அழிந்து, வீரத்தையும் தீரத்தையும் ஊக்கமாகிய ஆக்கத்தையும் உண்டாக்கும் தன்மையவாகிய பாரதியாரின் பாடல்களைப் பருகியவர்களே உண்மையான வேதாந்தசாரத்தைப் பருகியவர்கள் ஆவார்கள்.

இடியொலிபோல் முழங்கும் அச்சமில்லை யென்ற பாட்டில் "உச்சிமீது வானிடிந்து வீழ்கின்றபோதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே" என்ற அடிகள் பாரதியாரின் உள்ளமாகிய வீணையின் வீடனைத்தும் ஒலித்தன. இதனால் மனிதர் பலருக்கு இருந்த அச்சம் நீங்கி, அவருக்கு ஆண்மையும் வீரமும் உண்டாயிற்று. அதற்குமுன் அன்னார் நெஞ்சில் பயிரான கவலைகள் ஞாயிற்றைக் கண்ட பனியைப்போல் நீங்கின. உடனே உலகத்திலுள்ள மரம் செடி கொடி மிருகமுட்பட எல்லாஜீவராசிகளையும் நேசிக்கும் அருள்வெள்ளம் அவர் மனத்தில் ததும்ப ஆரம்பித்தது.

இந்த அருள் வெள்ளம்தான், உலகத்திலுள்ள உயிர்கள் யாவற்றையும் துன்பங்களினின்றும் விடுவிக்கவேண்டுமென்றபேரவாவைப் பாரதியாருக்குண்டாக்கிற்று. கவலையை யொழித்து அஞ்சா நெஞ்சினராய், வாழ்க்கையை ஊக்கத்தோடு உற்சாகமாக நடத்துவதற் குரிய தத்துவத்தைப் பாரதியார் தான்கண்டு தெளிந்த அளவோடு நில்லாது பிறருக்கும் எளிதாக உணர்த்துகின்றார். வேதாந்த சாஸ்திரத்தில் அவர் கண்ட உண்மை யாது? அவ்வுண்மை அவருக்கு அழியாததைரியத்தை எவ்வாறு அளித்தது? அதை நாம் எப்படி அவர் பாடல்களின் வாயிலாகப் பெற்றுய்யலாம் என்ற வினாக்களுக்கு விடைதேடுவது பயன் தருவதோர் ஆராய்ச்சியாகும்.

பாரதியார் புதுவையில் குருதரிசனம் செய்து உபதேசம் பெற்றதைக் கூறும் பகுதியில், அவர்வேண்டுகோளுக்கிணங்கி உபதேசம் செய்யாது ஓடிய குள்ளச்சாமி என்றபெயருடைய குருவை, வீடிடிந்து சுவர்கள் வீழ்ந்த பாழ்மனையின் கொல்லையில் பாரதியார் மறித்துக்கொள்ள, குரு பாரதியாரைத் தன் அருள் விழியால் நோக்கி,

"பரிதிகாட்டி அக்கணமே கிணற்றுளதன்
விம்பங் காட்டி அறிதிகொலோ......"

எனக்கேட்கவே, "அறிந்தேன்" என்று தான் பதில் கூறியதாக எழுதியுள்ளார். இதனால் அவர்குரு மிக்க மகிழ்ந்து சென்றதாகவும், பாரதியார் வேதாந்த மரத்திலொரு வேரைக்கண்டதாகவும், அதைத்தமிழுலகத்தார்க் கெடுத்துரைக்கின்றேன் எனவும்,

"தேசுடைய பரிதியுருக் கிணற்றி னுள்ளே
தெரிவதுபோ லுனக்குள்ளே சிவனைக் காண்பாய்"

என்ற இரண்டடிகளால் மிக நுட்பமாகக் கூறுகின்றார். பாரதியாரின் ஏனைய பாடல்களின் உட்பொருளை வெளிப்படுத்தும் திறவுகோல் இவ்வடிகளேயாகும். இதைக்கொண்டுதான் ஏனைய பாடல்களையும் கவிஞரின் ஹிருதயத்தையும் அறிந்து, வேதாந்தப் பாடல்களின் பயனைப் பெறமுடியுமாதலால், இவ்வடிகளை விரிவாக ஆராய்வது இன்றியமையாததாகும்.

இந்தியாவில் இதுகாறும் தோன்றியுள்ள தத்துவநூல்களை மூன்றுபெரும் சித்தாந்தங்களாகப் பிரிக்கலாம். அவைகளுள்ளே ஒருவாறு எல்லாச் சமயசித்தாந்தங்களுமடங்கும். அவை அத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம் என்பன. இம்மூன்றனுள் முன்னர்க்கூறிய அத்வைதசித்தாந்தத்தின் உண்மையைத் தம் அநுபவத்தில் உணர்ந்துதெளிந்தவர் பாரதியார். அவர் அத்வைதியாயினும் ஏனைய இரண்டு சித்தாந்தங்களை அறவே நம்பாமல் பழித்துத் தள்ளிவிடவில்லை. அத்வைதநிலையை யுணர்ந்து ஏறுவதற்கு உதவிபுரிகின்ற படிகளே, முறையேவிசிஷ்டாத்வைதமும் த்வைதமும் என்பது அவருடைய கொள்கை.

அத்வைத சித்தாந்தத்தின் தத்துவத்தை உவமைமுகத்தாலே விளக்கவந்த அடிகளே பாரதியாருக்கு அவர் குருசெய்த உபதேசமாகும்.

பல போலிகள் இருப்பதால் நம் பிக்கையடைய நேரில் எழுதுக.
அஜீர்ண பித்த சமனம்
ரூ. ஒன்று அனுப்பி 12 பாக்கெட்கள் நஞ்சன்கூடு பல் பொடி வீட்டில் பெறுக.
நஞ்சன்கூடு பல்பொடி
சோல் ஏஜண்டுகள்:- யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்

KALANILAYAM
REG. NO. M. 2324.

## வர்த்தமானம்

பெருந்தாய்:—போர்ச்சுகோ தேசத்தில் ஒரு ரயில்வே உத்தியோகஸ்தரின் 27வயதுடைய மனைவி ஏழு பெண் குழந்தைகளை ஒரே சமயத்தில் பிரசவித்தாள். தாயும் சேய்களும் சுகமே இருக்கின்றனர். இவ்வித சம்பவம் 1600-ம் ஆண்டில் ஜெர்மனியைச் சேர்ந்த ஹேமெல்ன் என்னும் இடத்தில் நிகழ்ந்ததாம்.

* * *

விநோத விவாகம்:—அமெரிக்காவிலுள்ளபிலடெல்பியாவில் ஒரு விசித்திர விவாகம் நடைபெற்றிருக்கிறது. வில்லியம் மேயர் என்னும்வாலிபர் ஓர் அழகிய பெண்ணை நகரமாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் விவாகம் செய்துகொள்கையில் இன்னும் இரண்டுவருஷ காலத்தில் இருவருக்கும் குழந்தைபிறக்காவிட்டால் விவாகத்தை ரத்துசெய்துகொள்வோமென்று ஒப்பந்தம் செய்துகொண்டனர்.

* * *

விநோதப் பிரசவம்:—மார்ஸலான் என்ற இடத்தில் ஒரு விநோதப் பிரசவம் நிகழ்ந்திருக்கிறது மில்டன் கான் என்ற மாது முதன்முதலில் ஒரு சனிக்கிழமை ஒரு குழந்தையைப் பெற்றாள். அவள் மறுபடியும் அடுத்தசெவ்வாயன்று இன்னொரு குழந்தையைப் பெற்றிருக்கிறாளாம். இருகுழந்தைகளும் தாயாரும் சவுக்கியமா யிருக்கிறார்களாம். இம்மாதிரி இதுவரை நிகழ்ந்ததில்லையாம்.

* * *

நியூயார்க் நகரில் 4500 அழகுச் சாலைகள் இருக்கின்றன. அவற்றில் இருபதனாயிரம் பேர் வேலை செய்கிறார்கள்.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results

New Business Completed
exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

Branch Secretary,
362, China Bazar Road,
Esplanade, Madras.
OR
R. G. DAS & Co.,
*Managers.*

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.
Please apply for particulars to:—

Branch Secretary,
362, China Bazar Road,
Esplanade, Madras.
OR
R. G. DAS & Co.,
*Managers.*

இண்டோ-கம்மர்ஷியல்
பாங்க், லிமிடெட்.
மாயவரம்

சென்னை ஆபீஸ், 107. அரண்மனைக்காரத் தெரு,
பஜார் பிராஞ்சு, 260. சைனுபஜார் ரோட்,
மதுரை, காரைக்குடி, விருதுநகர்,
கும்பகோணம், திருவாரூர்,
ஈரோடு, தூத்துக்குடி,
விஜயநகரம்,
புதுக்கோட்டை,
திருநெல்வேலி.
சப்-ஆபீஸ்
சீர்காழி & சிதம்பரம்

எல்லா வகையான பாங்கி அலுவல்களும் ஏற்றுக்கொள்ளப்படும். நிபந்தனைகள் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

S. N. N. சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்,
107. அரண்மனைக்கார தெரு, ஜி, டி. மதறாஸ்.

சிறந்த பலவிருத்தி ஔஷதம்
சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1

இனும்! "காம சாஸ்திரம்" இனும்!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.
ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ல் ஸ்தாபித்தது.

யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷுயரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.
யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்தஇன்வெஸ்ட்மெண்டும்,வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.
யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னால் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்ட முடையதும் ஆன கம்பனி.

ஹெட் ஆபீஸ்:—
செம்புதாஸ் தெரு,
சென்னை.
அல்லது
இந்தியா, பர்மா,
ஸிலோனில்
உள்ள பிராஞ்சுகள்

இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

Printed at the B. N. Press, Mount Road, and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)